377

# A GUIDE FOR SCHOOL ADMINISTRATION

★

SEKAR PUBLISHING HOUSE
SPH
TIRUCHY-2

T : 8
N60
112041

# பள்ளி ஆட்சி

## வழிகாட்டி

★

ஆசிரியர் :

ச. பாலசுப்பிரமணியன் பி. ஏ. பி. டி.,

(ஆசிரியர், பெரியார் பயிற்சிப் பள்ளி, திருச்சி.)

★

சேகர் பதிப்பகம்,

திருச்சிராப்பள்ளி-2.

1960.

முதற்பதிப்பு 1960.
உரிமை ஆசிரியருக்கே.
விலை ரூ. ஒன்று.

# முன்னுரை

ஆசிரியப் பயிற்சிபெறும் மாணவர்களுக்கு மட்டுமல்லாது, ஆசிரியப் பணிபுரியும் பெரு மக்களுக்கும் **'பள்ளி ஆட்சி வழிகாட்டி'** எனும் இச்சிறிய நூல் பெரிதும் பயனளிக்கும் என நம்புகிறேன். அரசினர் தேர்வுக்குச் செல்கின்ற மாணவ-ஆசிரியர்களுக்கு இந்நூல் சிறந்த வழிகாட்டியாகுமென்பதில் ஐயமில்லை. எனவே எல்லோரும் படித்துப் பயன்பெற்று, ஆதரவு நல்குமாறு வேண்டுகிறேன். யான் இச்சிறுநூலை எழுதப் பெரிதும் உதவியது, உயர்திரு. S. சிவராமகிருஷ்ணன் B. A. L. T., அவர்கள் எழுதிய **'பாடசாலை நிர்வாகம்'** எனும் நூலே. அன்னாருக்கு என் நன்றி உரித்தாகுக.

திருச்சி,
நவம்பர் 60.

ஆசிரியர்.

அச்சிட்டோர்: கண்ணன் அச்சகம்,
திருச்சிராப்பள்ளி-2.

# 1. கல்வி.

*1.* கல்வி என்ருல் என்ன? அதன் நோக்கங்கள் யாவை?

தெரியாத ஒன்றைத் தெரிந்து கொள்வது கல்வி. சூழ் நிலைக்கேற்ப பொருத்தமுறுதல் கல்வி. தூண்டலுக்கேற்ற துலங்கலின்பலனை அறிந்துகொள்வது கல்வி. கல்வியால் அறிவு வளர்ச்சியடைகிறது. ஆகவேகல்வியென்பது எல்லா இடங்களிலும் எக்காலத்திலும் நடைபெறுகிறது. இருந்த போதிலும் அது சிறப்பாக ஒழுங்காக நடைபெறும் இடம் பள்ளியேயாகும். கல்வியின் நோக்கத்தைப்பற்றி பல நாடுகளிலுமுள்ள பல அறிஞர்களிடையே கருத்து வேறு பாடுகள் இன்றும் உள்ளன. முற்காலக்கல்விக்கும் தற் காலக்கல்விக்கும் அடிப்படையிலும் நோக்கத்திலும் அநேக வேறுபாடுகள் உள்ளன. தற்காலக் கல்வித்திட்டத்தின் முக்கிய நோக்கமாவது, குடியரசு நாட்டில் சிறந்த மக்களாக மாணவர்கள் பிற்காலத்தில் வாழவேண்டும் என்பதே. உடல், உள்ளம், ஆன்மா என்ற மூன்றும் ஒருசேர வளர்ச்சி யடையவேண்டு மென்பதே பள்ளியின் நோக்கமாக இருக்க வேண்டும்.

*2.* கல்வியின் பலவகைகள் யாவை?

தற்போது புதிய பாடத் திட்டப்படி *1–7* வகுப்புகளை ஆரம்பக் கல்வியாகவும், 8 முதல் 11 வரை உயர்தரக் கல்வி யாகவும் மாற்றியுள்ளார்கள். இதற்குமேல் கல்லூரிக்கல்வி, தொழிற் கல்வி முதலியனவும் உள்ளன. தற்காலத்தில் மகாத்மா காந்தி அவர்களால் நாட்டுக்கு அளிக்கப்பட்ட கல்வித்திட்டம் ஆதாரக்கல்வித்திட்டம். இதை 'அடிப்படைக் கல்வித்திட்டம் 'வார்தா கல்வித் திட்டம்' என்றும் சொல்ல லாம். தொழில் அல்லதுசெயலை அடிப்படையாகக் கொண்டு அறிவைப் பெருக்கிக் கொள்வது ஆதாரக் கல்வியாகும். பள்ளிக்கு வருமுன் வீட்டில் பெறும் அறிவு பூர்வ ஆதாரக் கல்வி. முதல் 8வகுப்புகளில் படிப்பது (6 to *14* வயது) ஆதா ரக்கல்வி. 14 வயதுக்குமேல் 4 ஆண்டுகள் படிப்பது உயர்

ஆதாரக்கல்வி. வயதுவந்த முதியோர் எழுத்தறிவு பெறுவது முதியோர் கல்வியாகும்.

3. பாடசாலேயின் பல வகைகள் யாவை ?

(i) 1 முதல் 5 வகுப்புகள் ஒழுங்காக நடைபெற்றுவரும் பாடசாலேகள் பூரணபாடசாலேகளாகும். இவ்வித பாடசாலேகளே கல்வியைப் பெருக்கத் தேவையானவை. (ii) 2 அல்லது 3 வகுப்புகள்மட்டும் கொண்டு அருகேயுள்ள பூரணபாடசாலேயோடு இணேக்கப்பட்டு நடைபெறுவது உபபாடசாலே அல்லது துணேப்பாடசாலேயாகும். இதற்கு டிவிஷனல் இன்ஸ்பெக்டரிடம் அனுமதி பெற வேண்டும். இது பூரணபாடசாலேயிலிருந்து 1 மைலுக்குள்ளாகவே இருக்கவேண்டும். இதிலிருந்து வெளியேறும் மாணவர்களில் பாதிபேருக்குக் குறையாமல் பூரணபாடசாலேயில் சேரவேண்டும். (iii) புதிதாக ஆரம்பிக்கப்பட்டு ஆண்டுதோறும் 1, 2, 3 என்று வகுப்புகளேத் தொடர்ந்து நடத்தும் பாடசாலே 'வளர்ந்து வரும் பாடசாலே' யாகும்.

1 முதல் 5 வகுப்புக்கள் வரை உள்ளவை (கீழ்த்தர) ஆரம்பப் பாடசாலே என்றும் 6, 7, 8 வகுப்புகள் உள்ளவை உயர்தர ஆரம்பப்பாடசாலே என்றும் அழைக்கப்படும். இவை தவிர ஒரே ஆசிரியரே பல வகுப்புகளுக்கும் போதிக்கும் ஓராசிரியர் பாடசாலேகளும் உள்ளன. ஆனல் இவை தற்போது நீக்கப்பட்டு வருகின்றன. (iv) போலிப்பாடசாலே: ஓர் ஊரில் உண்மையிலேயே பள்ளி நடைபெருமல் நடை பெறுவதைப் போல சர்க்காருக்கும் கல்வி அதிகாரிக்கும் பொய்க்கணக்கு காட்டிப் பண உதவி பெறுவது போலிப் பாடசாலேயாகும். (v) விருதா பாடசாலே: ஓர் ஆசிரியருக்கு 35 பிள்ளேகள் வீதம் தினசரி வரவேண்டும். அப்போதுதான் அவருக்கு போதனே வேலேயிருக்கும். அதற்குக் குறைந்தால் அவருக்குக் கொடுக்கும் சம்பளத்தில் ஒரு பகுதி நஷ்டம். ஆகவே பொருளாதாரக் கஷ்டம் ஏற்படும். அது விருதா பாடசாலேயாகும். (வி–ம்) ஓர் பாடசாலேயில் வேலே செய்யும் ஆசிரியர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ற விகிதத்தில் மாணவர்களது வருகைப்பதிவு இருக்கவேண்டும். இல்லேயென்ருல் பிள்ளேகளில்லாமல் பாடசாலே நடத்த வேண்டிவரும். அது சிக்கனமில்லாத பள்ளியாகும். ஆகவே அதை விருதா பாடசாலே யென்கிருேம்.

4. நிரந்தரப் படிப்பறிவு என்றால் என்ன ? அதைப் பெற வழிகள் யாவை ?

தாய்மொழியில் பிழையின்றிப் பேசவும் எழுதவும் படிக்கவும் நிலைத்து நிற்கும்படியான அறிவைப் பெறுவது நிரந்தரப் படிப்பறிவு ஆகும். நிரந்தரப் படிப்பறிவு பெற வழிகள். (i) அரசியலார் கட்டாயக் கல்வித் திட்டத்தை அமுலாக்கி, குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பாத பெற்றோரைத் தண்டிக்கவேண்டும். (ii) இலவசமாகக் கல்வி சொல்லிக் கொடுக்கப்படவேண்டும். (iii) இலவசமாகப் புத்தகங்கள் கொடுக்கப்பட வேண்டும். (iv) நண்பகல் உணவு, ஏழை மாணவர்களுக்குஉடை முதலியனவும் தர வேண்டும். (v) பள்ளியில் பெற்ற அறிவை நூல்நிலையங்கள், வாசகசாலைகள் மூலம் அபிவிருத்தி செய்து கொள்ளலாம். (vi) இரவு வகுப்புகள் நடத்தி படித்த அறிவு மறக்காமலிருக்கச் செய்யலாம்.

5. தேக்கத்தை நீக்கும் வழிகள் யாவை ?

ஒருமாணவன் ஒரு ஆண்டுக்குமேல் ஒரேவகுப்பில் இருந்தால் அதைத் தேக்கமென்று கூறுகிறோம். தேக்கம் மாணவர்களது அறிவுப் பெருக்கத்துக்குத் தடை விதிப்பதோடு ஆண்டுதோறும் வெளியேறும் மாணவர்களது எண்ணிக்கையையும் குறைக்கிறது. சாதாரணமாக சராசரி திறமையுள்ள எல்லா குழந்தைகளும் கீழ்வகுப்புகளில் தேங்காமல் தேறிவிடும். அதிக பிற்போக்கான குழந்தைகள்தான் தேங்கி விடும். ஒவ்வொரு வகுப்புக்கும் தேக்க ஜாபிதா வைக்கப் பட்டு, தேக்கத்தை அறியவேண்டும். தேக்கம் அதிக அளவுக்குப் போகாமல், தகுந்த காரணங்களைக் கண்டு பிடித்துக் களைய வேண்டும்.

காரணங்கள் : (i) 5-வயதுக்குட்பட்ட சிறிய குழந்தைகளைப் பாடசாலையில் சேர்த்தல். (ii) பள்ளிக்குச் சரியாக வராமலிருத்தல் (iii) மாணவர்களின் திறமை, தகுதி, அறிவு இவற்றிற்கு ஏற்றவாறு பாடமும், போதனை முறைகளும் அமையாமை. (iv) ஆசிரியரது ஊக்கமின்மை, ஆயத்தக் குறைவுமுதலியன.

நீக்கும் வழிகள் : (i) பள்ளியில் வாசிக்க வயதாகாத சிறு குழந்தைகளைச் சேர்க்கக் கூடாது. (ii) வருட-

ஆரம்பத்தில் தவிர காலந்தவறி பிள்ளைகளைச் சேர்க்கக் கூடாது. (iii) பெற்றோர்களைச் சந்தித்து பிள்ளைகள் குறித்த காலத்தில் ஒழுங்காக பள்ளிக்கு வருமாறு சொல்லவேண்டும். (iv) மாணவர்களைத் தரம் பிரித்து, பிற்போக்கான மாணவர்களுக்கு, தனி கவனம் செலுத்தவேண்டும். (v) ஆசிரியர்கள் நன்கு ஆயத்தம் செய்து, போதனை முறைகளை அடிக்கடி மாற்றி கவர்ச்சியுடையதாகச் செய்யவேண்டும்.

## 6. வியர்த்தத்தைக் குறைக்க வழிகள் யாவை?

ஒரு சிறுவன் 5 வகுப்புகள் முடித்து நிரந்தரப்படிப்பறிவு பெறுவதற்கு முன்னரே 2 அல்லது 3 வகுப்புகளிலேயே பள்ளியைவிட்டு நின்றுவிட்டானானால் அவனுக்காக அரசாங்கம் செலவழித்தது வீணாகிறது. அதுவே கல்வியின் வியர்த்தம். (அ) வீண் செலவு ஆகிறது. இதனால் அரசாங்கத்தின் திட்டம் பாழாகி விடுகிறது. 5 ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு பள்ளியில் சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கையை எடுத்துக்கொண்டு, அதில் இப்பொழுது எத்தனைபேர் படிக்கிறார்கள், எத்தனைபேர் விலகிவிட்டார்கள், இடையேயுள்ள ஆண்டுகளில் எத்தனைபேர் சேர்ந்தார்கள், எத்தனைபேர் விலகிவிட்டார்கள், முதலிய விவரங்களைக்கொண்டு வியர்த்தத்தைக் கணக்கிடலாம். வியர்த்தத்தின் காரணமாக அநேக தீமைகள் விளைகின்றன.

குறைக்கவழிகள்: (i) வீணாதலுக்குரிய காரணங்களைக் கண்டு பிடித்து நீக்கவேண்டும். (ii) பெற்றோருக்குக் கல்வியின் பெருமையையும் அவசியத்தையும் கூறிமாணவர்களை இடையிலே நிறுத்தாமல் பள்ளிக்கு வரச்செய்யலாம். (iii) பள்ளியின் கடினமான சட்டங்களையும் பழக்கவழக்கங்களையும் மாற்றலாம். (iv) தீவிரப் பிரசாரம் மூலம் வியர்த்தத்தைக் குறைக்கலாம்.

## 7. ஆசிரியர் பெற்றோர் தொடர்பு ஏன் அவசியம்?

பள்ளிக்கு வருவதற்கு முன்பே சிறுவர்கள் வீட்டிலே அறிவு பெறுகின்றனர். வீட்டிலே பெறும் நல்ல பழக்க வழக்கங்கள் பள்ளியிலே அபிவிருத்தியடையும். வீட்டு வாழ்க்கையும் பள்ளி வாழ்க்கையும் ஒத்திருக்கவேண்டும். பள்ளி ஒரு சிறைச்சாலையாக இருக்கக்கூடாது, பள்ளியில்

பயிலும் சுத்தம் ஒழுங்குமுறை முதலியனவற்றை வீட்டிலும் கடைபிடிக்க வேண்டும். ஆகவே ஆசிரியர், பெற்ரேர்களை அடிக்கடி சந்தித்து மாணவர்களது கல்வி, திறமை முதலியவற்றைப் பற்றிப் பேசவேண்டும். பிள்ளைகளது வீட்டுச் சூழ்நிலையை ஆசிரியர் நன்கு தெரிந்து கொள்ள வேண்டும்.

தொடர்பு எங்ஙனம் அமையும்?

(i) பள்ளிக்கூட கிராமத்திலேயே ஆசிரியர் குடியிருக்க வேண்டும். (ii) பெற்ருேர்களை அடிக்கடி சந்தித்து பிள்ளைகளின் தேர்ச்சிபற்றிப் பேசலாம். (iii) வீடுகளுக்குச் சென்று பள்ளியில் சேராத பிள்ளைகளைச் சேர்க்கலாம். (iv) 'பெற்ருேர் சங்கம்' அமைத்து மாதமொருமுறை கூட்டம் போட்டு பள்ளி முன்னேற்றத்துக்கான வழிகளைப் பற்றி பேசலாம். (v) பிள்ளைகளின் முன்னேற்ற அறிக்கையை அனுப்புவதாலும் தொடர்பு கொள்ளலாம். (vi) பாடசாலையை ஒரு சமூக சேவா நிலையமாக்கி, கிராம முன்னேற்றத்திற்கு ஒரு வழி காட்டியாக அமைக்கவேண்டும். (vii) நூல் நிலையம், வாசகசாலை, வாஞெலி முதலியன அமைத்தும் (முதியோருக்கு) இரவுப்பள்ளிகள் நடத்தியும், தொடர்பு கொள்ளலாம். (viii) விசேட நாட்களில் பல அறிஞர்களை வரவழைத்து சொற்பொழிவு நடத்தலாம், (xi) புதிய விவசாய முறைகளையும் விஞ்ஞானக் கருவிகளையும் பற்றி கிராம மக்களுக்கு விளக்கிக்கூறலாம். (x) இவை தவிர, கல்வி வாரம், பொருட்காட்சி, விளையாட்டுகள், நாடகம் முதலியன நடத்தியும் கிராம மக்களது தொடர்பையும் உதவியையும் பெறலாம்.

## 2. பாடசாலை

*1.* கட்டடத்தின் அவசியம்?

கல்வி எங்கும் நிகழ்வதாக இருந்தாலும் அது சிறப்பாக நடைபெறக்கூடிய இடம் பாடசாலையேயாகும். முற்காலத்தில் கட்டடம் அவசியமில்லாமலிருந்தது. சில மாணவர்கள் குருகுல வாசத்திலும், திண்ணைகளிலும் கல்வி பயின்றனர். நேரம், காலம், ஒழுங்கு, பாடதிட்டம் இவையின்றி பொதுவாகக் கல்வி கற்பிக்கப்பட்டது, ஆனல் இப்போது நிலைமை

முற்றிலும் மாறிவிட்டது. மாணவர்களது எண்ணிக்கை, வயது, வகுப்பு, கற்கும் விஷயங்கள், இவை வேறுபடு கின்றன. ஆசிரியரும் மாணவரும் மழை, வெயில், காற்று போன்ற இயற்கைக் கோளாறுகளிலிருந்துகொண்டு கடமை யாற்றமுடியாது. ஆகவே, சுகாதார வசதிகளோடு கூடிய ஒரு கட்டடம் அவசியமாகின்றது.

2. பாடசாலைக்குரிய இடத்தைத் தேர்ந்தெடுக்கும் போது கைக்கொள்ள வேண்டிய நிபந்தனைகள் யாவை?

(i) காற்று, சூரிய வெளிச்சம் வரும்படியான மேடான திறந்த வெளிப்பிரதேசமாக இருக்கவேண்டும் (ii) பள்ள மும் ஈரம் தங்கும் படியான இடமும் இருக்கக்கூடாது. (iii) குப்பை கூளம் கொட்டித் தூர்த்த பூமியும் சுண்ணும்பு மண் பூமியும் விலக்கப்படவேண்டும். (iv ஆறு, குளம், கிணறு அருகிலிருக்கக்கூடாது. (v) அடர்ந்த புதர்களும் சப்பாத்தியும் வளர்ந்துள்ள இடம் கூடாது (vi) நெருக் கடியான வீதிகள், கடைவீதிகள், ஆலைகளுக்கு அருகே இருக்கக்கூடாது. (vii) காற்றையும் வெளிச்சத்தையும் தடுக்கக்கூடிய மதிற்சுவர்கள் அருகே இருக்கக்கூடாது. (viii) பிற்காலத்தில் விரிவாக்குவதற்கு ஏற்றவாறு பரந்த இடமாக இருக்கவேண்டும். (ix) மழைநீர் தேங்காமல் வழிந் தோடக்கூடியவாறு இடம் வாட்டமாய் இருக்கவேண்டும். (x) பொதுவாக சுற்றுப்புறம் இயற்கையழகு நிரம்பிய தாகவும் மகிழ்ச்சியளிக்கக் கூடியதாகவும் இருக்கவேண்டும்.

3. கட்டடம் கட்டும்போது அநுசரிக்க வேண்டிய விதிகள் யாவை?

(i) இடத்தின் பரப்பு, பணவசதி இவற்றைப் பொறுத்து கட்டடம் அமைக்கப்படவேண்டும். (ii) முன் புறம் தோட்டத்திற்கும் பின்புறம் விளையாடுவதற்கும் இடம் ஒதுக்கவேண்டும். (iii) கட்டடம் தென்வடலாக இருக்கவேண்டும். கிழக்கு மேற்காக இருந்தால் நேர் வெயிலும், காற்றும் தொந்தரவு கொடுக்கும். (iv) பூமியி லிருந்து ஈரம் கசிந்து வராமல் சிமெண்ட் கான்கிரீட் போடப் படவேண்டும். (v) தளஅமைப்பு தண்ணீர் விட்டுக் கழுவக் கூடிய பொருளால் (சிமெண்ட்) போடப்பட வேண்டும், ஒரு மாணவனுக்கு 9½ ச. அடி வீதம் இருக்க

வேண்டும். (vi) சுவர்களுக்கு மங்கிய பச்சைவர்ணம் அடிக்கவேண்டும். (vii) போதிய காற்றும் வெளிச்சமும் வர சன்னல்கள் எதிரெதிராக அமைக்கப்படவேண்டும். சன்னலின் பரப்பு சுவரின் பரப்பில் $\frac{1}{5}$ பாகம் இருக்கவேண்டும். தரையில் உட்காரும் அறைகளில் 3 அடிக்குள்ளும், பெஞ்சில் உட்காரும் அறைகளில் 4 அடிக்குள்ளும் அடிமட்டம் இருக்க வேண்டும். மழைச் சாரலும் வெயிலும் படாதவாறு சன்னலின் மேல் "சார்ப்புகள்" அமைக்கலாம். (viii) ஆசிரியருக்கு அருகில் வெளிப்புறம் திறக்கக்கூடியதாய் 2 கதவுகள் இருக்கவேண்டும். கதவுகள் பின்புறம் இருக்கக்கூடாது. (ix) கட்டடத்தின் கூரைக்கு தென்னங்கீத்துகள் போடுவது சிக்கனத்தோடு குளிர்ச்சியுங்கூட. எனினும் அடிக்கடி ஒட்டடையடித்து பூச்சி கரையான் அண்டாதவாறு சுத்தம் செய்யவேண்டும். நெருப்பணைக்கும் கருவிகளும் மணல் தொட்டிகளும் வைத்திருக்கவேண்டும். புதுவகையான சீமை ஓடும், தகடுகளும் போடக்கூடாது. ஏனெனில் அவை உஷ்ணத்தை உள்ளே இறக்கும். (x) வகுப்பறைகள் 20′×18′ இருத்தல் நலம். எக்காரணம் கொண்டும் 25′க்கு மேல் நீளம் இருக்கக்கூடாது. அறைச்சுவரின் உயரம் 10′ இருக்கவேண்டும். (xi) இறைவணக்கம், பொதுக் கூட்டம் இவைகளுக்காக ஒரு பொது அறையும், அது தவிர பலவகுப்பறைகளும், அலுவல் அறை, ஆசிரியர் அறை, வாசகசாலை, காட்சிசாலை, தொழிற்பயிற்சிச்சாலை, உபகரணங்கள் அறை, போன்ற அறைகளும் கட்டப்படவேண்டும். சிக்கனத்திற்காக பொது அறையை நகர்த்தும் தட்டிகள் கொண்டு வகுப்பறைகளாகத் தடுத்துக்கொள்ளலாம். (xii) ஆரம்பப்பள்ளிகளுக்கு மாடிக்கட்டடம் ஏற்றதல்ல. அப்படி இருந்தால் படிகள் சிறியதாகவும் கைப்பிடிச்சுவருடனும் இருக்கவேண்டும். (xiii) இவைதவிர, மல அறைகளும், சிறுநீர் அறைகளும், குடிதண்ணீர் வசதிக்கான ஏற்பாடுகளும் செய்யவேண்டும். (xiv) பொதுவாக பள்ளிக் கட்டடம் மற்ற கட்டடங்களைவிட சிறப்பான முறையில் அழகாக அமைக்கப்படவேண்டும். பள்ளியின் பெயர்ப் பலகை முன்புறம் தொங்கவிடப்படவேண்டும்.

4. பாடசாலைச் சுகாதார வசதிகள் எவ்வாறு அமைக்கப்பட வேண்டும்?

(i) காற்றும் வெளிச்சமும் : அசுத்தக்காற்று வெளியேறவும் தூய காற்று உட்புகவும் சன்னல்களும், வெண்டி

லேடர்களும் வைக்கப்படவேண்டும். வெளிச்சம் அறை முழுவதும் பரவி விழுமாறு சன்னல் 4 புறமும் இருக்க வேண்டும். படிக்கும் போதும் எழுதும்போதும் கடை பிடிக்கவேண்டிய சில ஒழுங்கு முறைகளைச் சொல்ல வேண்டும் (நடந்துகொண்டும், படுத்துக்கொண்டும், ஓடும் வண்டிகளிலிருந்தும், மங்கிய வெளிச்சத்திலும் படித்தாலோ எழுதினாலோ கண்கெட்டுவிடும். 1 அடி தூரத்தில் புத்தகத்தைப் பிடித்து நேராக உட்கார்ந்து படிக்கவேண்டும். வெளிச்சம் எப்போதும் இடது பின்புறமாக இருந்து வருதல் நலம்) பிள்ளைகளின் பார்வையில் கோளாறுகள் ஏற்பட்டால் மருத்துவரிடம் சிகிச்சைக்கு அனுப்பவேண்டும்.

(ii) சுகாதார ஏற்பாடுகள்: பள்ளி நேரங்களில் ஆசிரியருக்கும் மாணவருக்கும் மலஜலங்கழிக்கக் கக்கூசு வசதிகள் அவசியம். பாடசாலைக்கு 40′ தூரத்தில் காற்று வீசாத திசையில் கட்டப்படவேண்டும். சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் தனித்தனியாக கட்டப்படவேண்டும். சிறுவர்களுக்கு 20 பேருக்கு 1 அறைவீதமும் பெண்களுக்கு 10 பேருக்கு 1 அறை வீதமும், இவைதவிர சிறுநீர் கழிக்க இடங்களும் அமைக்கப் படவேண்டும். கிராமங்களில் 40′ க்கு அப்பால் மறைவாக வேலியமைத்து 1′ அகலமும் 1′ ஆழமும் உள்ள நீண்ட குழிகள் வெட்டி உபயோகிக்கலாம். அவ்வப்போது சிறிது மண் போட்டால் துர்நாற்றம் எழாது. அக்குழி தூர்ந்த பிறகு வேறு இடத்தில் குழிவெட்டிக் கொள்ளலாம்.

(iii) சுத்தமாக இருத்தல்: மாணாக்கரின் உதவியைக் கொண்டு பாடசாலை வகுப்பறைகள், உபகரணங்கள், விளையாடுமிடம் இவற்றை சுத்தமாக வைத்திருக்கவேண்டியது ஆசிரியரது கடமையாகும். வகுப்பறைகளைப் பெருக்கவும், பெஞ்சு மேசை, நாற்காலி இவைகளைத் துடைக்கவும் செய்யலாம். ஓய்வு நாட்களில் தண்ணீர் விட்டுக் கழுவவும் ஒட்டடையடிக்கவும் செய்யலாம். காகிதத்துண்டுகள் மற்றும் குப்பைகளைக் கண்ட இடங்களில் போடக்கூடாது. கண்ட இடங்களில் எச்சல் துப்புதல், சிறுநீர் கழித்தல் போன்ற காரியங்கள் செய்யக்கூடாது.

(iv) தொத்து நோய்களைத் தடுத்தல்: தொத்து நோய் சிறுவர்களிடையே பரவக்கூடியது. சொரி, சிறங்கு உள்ளவர்களைத் தனியே உட்காரவைக்கவேண்டும். கண்ணோய், சின்னம்மை, கக்குவான் போன்ற வியாதியுள்ள

வர்களை நோய் தீரும் வரை லீவு கொடுத்து, அனுப்பவேண்டும். வைசூரி, காலரா போன்ற பெருவாரித் தொத்து நோய்கள் ஊரில் பரவியுள்ள காலங்களில் தடுப்பு ஊசி போடவேண்டும். அவசிய மேற்பட்டால் கல்வி இலாகா அதிகாரிகளுக்குத் தெரிவித்து விட்டு பாடசாலையை சில நாட்களுக்கு மூடிவிடலாம். ஆண்டுக்கொருமுறை எல்லா மாணவர்களுக்கும் வைத்தியப் பரிட்சை செய்ய வேண்டும். முதலுதவிப் பெட்டி பள்ளியில் வைக்கப்பட்டு, தேவையான பொழுது மாணவர்களுக்கு மட்டுமின்றி, பொது மக்களுக்கும் பயன் படுத்தப்படவேண்டும்.

(v) இவைதவிர ஆசிரியர் சுகாதாரத்தின் அவசியத்தை மாணவர்க்குப் போதிக்கவேண்டும். உடல் உடை எப்போதும் சுத்தமாக இருக்கவேண்டும். நல்ல சத்துள்ள உணவையே உட்கொள்ளவேண்டும். நல்ல குடிதண்ணீரின் அவசியத்தையும் உடற்பயிற்சியின் நன்மைகளையும் எடுத்துக்கூறி தேகத்தை ஆரோக்கியமாகவும் நோயின்றியும் வைத்திருக்கச் செய்யலாம்.

இம் முறைகளால் பாடசாலையில் சுகாதார ஏற்பாடுகள் செய்யலாம்.

5, தகவல் பலகை என்றால் என்ன?

ஒரு பாடசாலையைப்பற்றி முழுத்தகவல்களையும் தெரிவிப்பது தகவல் பலகை. நல்ல முறையில் அழகாக எழுதப்பட்டு எளிதில் கண்ணிற் படும்படியான இடத்தில் வைக்கப்பட்டிருக்கவேண்டும். புதிதாக வருபவர்கள் பள்ளியைப் பற்றி அறிந்துகொள்ள, தகவல் பலகை பயன்படும், விவரங்கள் ;

1. பாடசாலையின் பெயர் :
2. மானேஜர் (அ) நிருவரின் பெயர் :
3. அங்கீகரிக்கப்பட்ட வகுப்புகள் ;
4. அங்கீகரிக்கப்படாத வகுப்புகள் (இருந்தால்) ;
5. ஆசிரியர்களின் எண்ணிக்கை :
6. மாணவர்களின் எண்ணிக்கை: சிறுவர்கள் : சிறுமிகள் ;

7. பாடசாலை இடங்களின் எண்ணிக்கை;
8. வேலை நேரம்;
9. வார விடுமுறை நாள்;
10. பாடசாலையுள்ள பிரதேசத்தில் படிக்கும் வயதுள்ள குழந்தைகளின் எண்ணிக்கை; சிறுவர்கள்;
சிறுமிகள்:

6. நூல் நிலையத்தின் பயன்கள் யாவை?

கல்வியின் முக்கிய நோக்கம் மாணவனைச் சிறந்த குடிமகனாக ஆக்குவதே. சிறந்த குடிமகனாக விளங்க ஏட்டுப் படிப்பு மட்டும் போதாது. பொது அறிவும் தேவை. அதற்கு நூல் நிலையம் அவசியம். ஒவ்வொரு பாடசாலையிலும் பொதுவான நூல்நிலையத்துடனும் பிரதி வகுப்புக்கும் தனித்த நூல் நிலையம் இருப்பதே நலம். மாணவர்களது அறிவு, தகுதி, இவற்றிற்கேற்றவாறு அந்தந்த வகுப்பு ஆசிரியரே புத்தகங்களைக் கொடுத்து வாங்கலாம். கதைப்புத்தகங்கள், பெரியோர்களின் வாழ்க்கை வரலாறுகள், கட்டுரைகள், பொது அறிவு நூல்கள் முதலியன நூல் நிலையத்தில் இடம் பெறலாம். பழைய பாடப்புத்தகங்களும் சிறுவர்க்குத் தகுதியற்ற புத்தகங்களும் விலக்கப்படவேண்டும். பெரிய எழுத்தில் அச்சிடப்பட்டதும் படங்கள் உள்ளதும் நன்கு தைக்கப்பட்டதுமான புத்தகங்கள் நல்லது. நூல் நிலையத்துடன் வாசகசாலையும் அமைப்பது நலம். புத்தகங்களைக் கொடுத்து வாங்குவதில் சில ஒழுங்கு முறைகளை வகுத்துக் கொள்ளவேண்டும். புத்தகங்களின் பட்டியல் ஒன்றும், பிள்ளைகளுக்குக் கொடுத்து வாங்கும் கணக்கைக் காட்டக்கூடிய பட்டியலொன்றும் நூல் நிலயத்திலிருக்க வேண்டும். ஆசிரியர்க்கென அகராதியும் போதனு முறைப்புத்தகங்களும் இருக்கவேண்டும்.

பயன்கள் (i) புத்தகங்கள் படிப்பதில் ஆசையுண்டாக்குகிறது. (ii) மௌனவாசிப்புப் பழக்கம் ஏற்படுகிறது. (iii) பொது அறிவு அபிவிருத்தியடைகிறது. (iv) ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வழியில் செலவழிக்கலாம். (v) மாணவர்களது கற்பனுசக்தியையும் பகுத்தறிவையும் வளர்க்கிறது. (vi) புத்தகங்களை நன்கு கையாளும் பழக்கம் ஏற்படுகிறது.

7. தோட்டம் அமைக்கும் விதத்தையும் நன்மைகளையும் வரைக.

பெரும்பாலான பள்ளிகளில் தோட்டம் போட இடம் கிடைப்பது அரிது. இருந்தாலும் இருக்கிற சிறிய இடத்தில் அழகான தோட்டம் அமைக்கலாம். (i) தோட்டம் கட்டடத்துக்கு வடபுறமாகவோ தென்புறமாகவோ இருக்க வேண்டும். அப்போதுதான் நாள் முழுதும் சூரிய வெளிச்சம் பயிர்களின் மேல் விழும். (ii) பாடசாலைக்கு அருகிலேயே இருக்கவேண்டும். (iii) நிலம் வளமுள்ளதாக இருக்க வேண்டும். இல்லையானால் எரு, வண்டல் மண் முதலியன போடவேண்டும். (iv) தண்ணீர் வசதிகள் அருகிலேயே இருக்கவேண்டும். (v) தோட்டத்தைப் பாதுகாக்க வேலி அவசியம். கிளுவை, காட்டாமணக்கு, சவுக்கு, கொருக்காப் புளி போன்ற உயிர் வேலிகள் சிக்கனமானவை. விஷப் பூச்சிகள் வந்தடையக் கூடிய கள்ளி, சப்பாத்தி போன்ற வேலிகள் கூடாது.

நன்மைகள்; (i) இயற்கைப் பாடத்தில் படித்த விஷயங்களை நேரடியாக உற்றுப்பார்த்து அறிவதற்குத் தோட்டம் பயன்படும். (ii) தோட்டம் பாடசாலைக்கு அழகைக்கொடுக்கிறது. (iii) வகுப்பறையில் அடைபட்டிருக்கும் மாணவர்களுக்குத் தோட்டவேலை மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் கொடுக்கும். (iv) தோட்டவேலை உழைப்பின் உயர்வையும் மேன்மையையும் உணரச் செய்கிறது. (v) பிற்காலவாழ்வில் ஓர் பொழுது போக்காகவும் வருவாய் கொடுக்கக்கூடியதாகவும் அமையும். (vi) உடலுக்கு வலுவைக் கொடுக்கிறது. (vii) மாணவர்களிடையே ஒற்றுமை, கட்டுப்பாடு, விட்டுக்கொடுக்கக்கூடிய மனப்பான்மை முதலிய வற்றை வளர்க்கிறது.

8. விளையாட்டினால் ஏற்படும் நன்மைகள் யாவை?

விளையாடுமிடம் காற்றோட்டமுள்ள திறந்த இடமாக இருக்கவேண்டும் ஆரம்பப் பள்ளியில் ஒவ்வொரு மாணவனுக்கும் 250 ச. அடி பரப்பும் நடுத்தரப் பள்ளியில் ஒவ்வொரு மாணவனுக்கும் 500 ச. அடி பரப்பும் தேவை. விளையாடுமிடத்தில் கல், முள், புல் பூண்டு மேடு பள்ளமில்லாமல் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். சிறுவர்களது வயது, அறிவுக் கேற்றவாறு விளையாட்டுகளைத் தேர்ந்தெடுக்கவேண்டும்.

நன்மைகள் : (i) விளையாட்டு உடல் வளர்ச்சிக்கும் மனவளர்ச்சிக்கும் இன்றியமையாதது (ii) கட்சி ஒற்றுமை, பாரபட்சமின்மை, காயம், அடி இவைகளைச் சகித்துக்கொள்ளும் தன்மை ஏற்படுகிறது. (iii) நியாயம், பொறுமை, மரியாதை, முதலிய குணங்கள் வளர்கின்றன (iv) சகோதரமனப்பான்மையும், கூடி வாழும் தன்மையும் ஏற்படுகின்றன.

9. காட்சிசாலையினால் நன்மைகள் யாவை ?

காதால் கேட்பதைவிட கண்ணால் பார்க்கும் விஷயங்கள் மனதில் நன்கு பதிகின்றன. ஆகவே போதனைக்குத் துணையாக ஒவ்வொரு பாடசாலையிலும் ஒரு காட்சிசாலை அவசியம். காட்சிசாலைக்குப் பொருள்களைக் காசுகொடுத்து வாங்க வேண்டியதில்லை. ஆசிரியரும் மாணவர்களுமே சேகரிக்கலாம். சேகரித்த பொருள்களை ஒழுங்காக கண்ணாடி பீரோக்களில் அடுக்கிவைக்கலாம். கொடுத்தவர் பெயர், தேதி, பொருளின் பெயர் முதலியவற்றை சீட்டுக்களில் எழுதிவைக்கலாம். தாவரவர்க்கப் பொருள்கள், பிராணிவர்க்கப் பொருள்கள், கைத்தொழில் பொருள்கள், அபூர்வப்பொருள்கள் முதலியன இடம் பெறலாம். மற்றும் உயிருள்ள பிராணிகளையும் வளர்க்கலாம்.

நன்மைகள் : (i) பொருள்களைச் சேர்க்கும் குணம் இயல்பானது. காட்சிசாலை இந்த ஆவலைப் பூர்த்தி செய்யும். (ii) சேகரித்த பொருள்களை ஒழுங்காக வகைப் படுத்தி அடுக்குவதால் ஒழுங்குப் பயிற்சி பெறுகிறார்கள். (iii) மாணவர்க்கு காட்சிப்பொருள்கள் மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் கொடுக்கும். (iv) கண்களுக்கும் கைகளுக்கும் பயிற்சியளிப்பதோடு ஐம்புல வளர்ச்சிக்கும் உதவும். (v) பொருள்களின் பெயர்களை அறிவதால் சொல்லறிவு பெருகும்.

10. கரும்பலகையும் இதரபோதனா உபகரணங்களும் :

கரும்பலகை மிகச்சிறந்த போதனா உபகரணமாகும். கணக்குபோடவும் பாடச்சுருக்கம், கடினபத விளக்கம், சித்திரம் - தேசப்படம் வரைதல் இவைகளுக்கும் கரும் பலகை பயன்படும். ஆசிரியருக்கு இடதுபுறம் எல்லா

மாணவர்களுக்கும் தெரியும் படியான உயரத்தில் 4'×3' கரும்பலகை இருக்கவேண்டும். சுவர்க் கரும்பலகைகளும் உபயோகிக்கலாம். ஆண்டுக்கொருமுறை கறுப்புவர்ணம் அடிக்கவேண்டும். வெள்ளைச் சாக்கட்டியுடன் கவர்ச்சியாயிருக்க வர்ணச் சாக்கட்டிகளும் உபயோகிக்கலாம். கரும்பலகை துடைக்க துணியை உபயோகிக்கவேண்டும். அதை அடிக்கடி சுத்தம் செய்யவேண்டும்.

பாடத்துக்கு வேண்டிய கதைச் சித்திரங்கள், தேசப் படங்கள், குறிப்புப் படங்கள், மாதிரிகள், அளவைக் கருவிகள், கட்டைகள், விதைகள் முதலிய வற்றை அதிக செலவில்லாமல் சேகரிக்கலாம். பத்திரிகைப் படங்களும் போதனைக்கு உதவிசெய்யும். மற்றும் விலையுயர்ந்த உபகரணங்களை சர்க்காரிடம் உதவித் தொகை பெற்று வாங்கிக்கொள்ளலாம். எல்லா உபகரணங்களையும் தூசு படாதவாறு, கண்ணாடி பீரோக்களில் ஒழுங்காக அடுக்கி வைத்து அவ்வப்போது பயன்படுத்தவேண்டும். அழகாக அடுக்கிவைத்தால் மட்டும் போதாது.

# 3. பாடத்திட்டம்

### 1. பாடத்திட்டம் என்றால் என்ன ?

நிரந்தரப் படிப்பு அறிவு, உலகப் பொது அறிவு, தொழிற் பயிற்சி இவை மூன்றும் பெறுவதே கல்வியின் முக்கிய குறிக்கோள். ஆகவே கல்வி (பாட) த்திட்டத்தில் இவை மூன்றுக்கும் பயிற்சி கொடுக்குமாறு பாடங்கள் சேர்க்கப்படவேண்டும். எனவே பாடத்திட்டம் என்றால் "கல்வி நன்முறையில் நடைபெற எந்தெந்த வகுப்புகளில் என்னென்ன பாடங்கள் போதிக்கப்படவேண்டும் என்று திட்டமாக அறிவிப்பது". பாடங்கள் வாழ்க்கைக்குப்பயன் படுவனவாகவும், உடல் உள்ள ஆன்மா மூன்றும் ஒரு சேர வளர்ச்சியடையச் செய்யும் படியாகவும் இருக்கவேண்டும். முன்பு படிப்பு, எழுதுதல், கணிதம் ஆகிய மூன்றும் முக்கியமாகக்கருதப்பட்டு, உடற்பயிற்சி, கைப்பழக்கம் ஆகியவை விடப்பட்டன. தற்பொழுது எல்லா பாடங்களும் சேர்க்கப் பட்டுள்ளன.

புதிய பாடத்திட்டம்; சென்னை சர்க்கார் கல்வி இலாகா 1939-ம் ஆண்டு ஆரம்ப பாடசாலைக்கு பாடத்திட்டம்

வெளியிட்டு, அவ்வப்போது தேவையான பல மாற்றங்கள் செய்து கடைசியாக 1957-ல் திருத்திய பாடத்திட்டம் வெளியிட்டிருக்கிருர்கள்.

பாடத்திட்டம்: 1 முதல் 4 வகுப்புகளில் தமிழ், கணிதம், இயற்கைப் பாடமும் தோட்ட வேலேயும், சமூக அறிவு, முதலிய பாடங்களும் தேகப் பயிற்சி (விளையாட்டு), கைவேலே, நீதி போதனே, முதலிய இதரபாடங்களும் இடம் பெறவேண்டும். 5-ம் வகுப்பிற்கு மேல் ஆங்கிலம், தமிழ், கணிதம், விஞ்ஞானம், சமூக அறிவு, தேகப் பயிற்சி, கைவேலே, நீதிபோதனே, முதலிய பாடங்களும் இடம் பெறவேண்டும். எல்லா வகுப்புகளுக்கும் (இவைதவிர) இஷ்டபாடங்களாக சித்திரம், முதற்சிகிச்சை, வேறுமொழி (ஹிந்தி, உருது, போன்றவை) மதபோதனே முதலியவை யும் இடம் பெறலாம். இப்பாடத்திட்டத்தின் முக்கியமான குறிக்கோள். (1) மாணவர்கள் நேரடி அனுபவம்,மூலம் அறிவு பெறவேண்டும், (2) ஆசிரியர் மாணவர்க்கு, நேரடி அனுபவம் பெற பல வாய்ப்புகளே ஏற்படுத்தித்தர வேண் டும். அதாவது அனுபவமுறைகளேப் பின்பற்றவேண்டும்.

ஆசிரியரும் பாடத்திட்டமும்: பாடத்திட்டம் ஆசிரி யருக்கு மிகவும் முக்கியமானது. அதை வழிகாட்டியாக வைத்துக்கொண்டு எப்போதும் பின்பற்றவேண்டும். ஒரு வகுப்புக்கு ஒரு ஆண்டுக்குள் எவ்வளவு போதிக்கவேண் டும் என்பது திட்டத்தில் கொடுக்கப்பட்டிருக்கும். அதை எப்போதாவது ஆசிரியர் பார்த்தால் போதாது. அதை அடிக்கடிபார்த்து ஒவ்வொரு பாடத்திற்கும் போதனு திட்டம் வகுத்துக் கொள்ளவேண்டும். காலாண்டு, அரை யாண்டு, முழு ஆண்டுத் தேர்வுகளுக்காக 3 பகுதிகளாகப் பாடங்களேப் பிரித்துக்கொண்டு நடத்தவேண்டும். அதை மேலும் பகுதிகளாகப் பிரித்து மாதவாரிப் பாடத்திட்டம் தயாரிக்கலாம். குறித்த காலத்தில் குறித்த பாடங்களே முடிக்கவேண்டும். ஒவ்வொரு வருஷமும் முன் அனுப வத்தைக்கொண்டு குறைகளே நீக்கி மாதவாரி போதனு திட்டத்தைப் புதுப்பித்துக் கொள்ளலாம்,

மாணவர்களது முன்னேற்றம் எப்போதும் கவனிக்கப் படவேண்டும். முன்னேற்றம் காணப்படாவிட்டால் சிந்தித்து போதனு திட்டத்தை மாற்றியமைப்பது நல்லது. படிப்

படியாக, தெரிந்ததிலிருந்து தெரியாததற்கு, எளிமையிலிருந்து கடினமான பாடத்துக்குச் செல்லவேண்டும். ஆசிரியர் பெற்ற அனுபவ அறிவைக்கொண்டு போதனை நடத்துவதே சிறந்தது.

2. செய்து கற்றல் முறையை விவரிக்க :

மாணவர்கள் அனுபவ முறை மூலமாகக் கற்றால் நல்ல பயன்கள் கிடைக்கின்றன. ஆகவே செயல் திட்டமுறை, வார்தா முறை போன்ற திட்டங்களைப் பின்பற்றலாம். பாடத்திட்டத்தில் "செய்து கற்றல்" (Learning by doing) மிகவும் வற்புறுத்தப்படுகிறது. பயிற்சி, சிறுகைத் தொழில், செயல்மூலம் கல்வி இம்மூன்றும் சேர்க்கப்பட்டுள்ளன. தோட்டம் போடுதல், சுகாதாரவிதிகளை அனுசரித்தல், உல்லாசப் பிரயாணம் செல்லுதல், மாதிரிகள் செய்வது, சித்திரங்கள் சேகரிப்பது, பலவகை விவாதங்கள், நாடகங்கள் நடத்துவது செய்து கற்றலுக்கு உதாரணங்களாகும்.

சிறுகைத்தொழில்கள் : பாடத்தில் தமிழ்நாட்டில் வெவ்வேறு பாகங்களில் நடைபெறக்கூடிய கைத்தொழில்களின் பட்டியல் ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது. கிராமத்தில் செலவில்லாமல் சிக்கனமாக கிடைக்கக்கூடிய பொருள்களைக்கொண்டு, அந்தந்த கிராமத்துக் கேற்றவாறு 1 அல்லது 2 கைத்தொழில்களைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம். இதற்கு விசேடப் பயிற்சி தேவையில்லை. கிராமங்களிலுள்ள தொழிலாளர்களிடமிருந்தே விவரங்களைக் கேட்டு அறிந்து பயிற்சி பெறலாம். அத்தொழிலாளிக்கு ஆண்டுக்கு ஒரு முறை (ரூ. 100-க்குள்) சர்க்கார் உதவித் தொகை யளிக்கும். இவ்வாறு தலநிலையறிந்து கைத்தொழிலைத் தேர்ந்து வேலைத் திட்டமொன்றைத் தயாரித்துக் கொள்ளலாம். கைத்தொழில் போதிப்பதன் நோக்கம் மாணவர் சிறந்த தொழிலாளராவது அல்ல. அனுபவப் பயிற்சி (செய்து கற்றல்) பெறவேண்டுமென்பதே நோக்கம்.

உடற்பயிற்சிக் கல்வி : உடற்பயிற்சிக் கல்வியிலும் செயல் மூலம் கல்வி பின்பற்றப்படவேண்டும். பல அறிஞர்களும் மருத்துவர்களும் உடற்பயிற்சியின் அவசியத்தை யெடுத்துக் கூறிய பிறகு தற்போது உடற்பயிற்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கப் பட்டுள்ளது. ஆசிரியர் பலவகை

விளையாட்டுகள் தெரிந்தவராக இருக்கவேண்டும். பல பாடசாலைகள் ஒன்றுகூடி போட்டிப் பந்தய விளையாட்டு விழாக்கள் நடத்தலாம். உடற்பயிற்சிக்கும் போதனை திட்டம் வகுக்கவேண்டும். அரசியலார் வெளியிட்டுள்ள உடற்பயிற்சித் திட்டத்தைப் பின்பற்றவேண்டும். தன்னுடைய உடற்பயிற்சி அறிவை, புத்தகங்கள் படித்தும், தனியாக நடைபெறும் உடற்பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்டும் அதிகரித்துக் கொள்ளலாம்.

### 3. பாடக்குறிப்பு எவ்வாறு எழுதப்படவேண்டும் ?

ஒவ்வொரு ஆசிரியரும் தான் நடத்தும் பாடங்களுக்கு பாடக்குறிப்பு எழுதுதல் அவசியம். காலத்தை வீணுக்காமலிருக்கவும், வகுப்பில் சென்று யோசனைக்கிடங் கொடாமல் விடுவிடென்று பாடம் நடத்துவதற்கும் நன்கு கவனமாகத் தயாரிக்கப்பட்ட பாடக்குறிப்பு அவசியம், பாடக்குறிப்புகள் ஒவ்வொரு பாடத்துக்கும் தொடர்ந்து எழுதப்பெறவேண்டும். ஒரே பெரிய நோட்டில் பல பாடங் களும், பல சிறிய நோட்டுகளில் பல பாடங்களும் எழுதலாம். பாடக்குறிப்பில், (1) போதிக்கப்போகும் பகுதி (unit), கடினவார்த்தைகள், அதை விளக்க பலவழிகள், கரும் பலகைச் சுருக்கம் இடம் பெறவேண்டும். (2) உபகரணங் களும், சோதனைகளும் இடம் பெறவேண்டும். (3) மாண வர்களுக்கு கொடுக்கும் பயிற்சிகள் (உ-ம்) வாயால் பதில் சொல்வது, எழுத்துப் பயிற்சி, படங்கள், சித்திரங்கள் வரைதல், மாதிரிகள் செய்தல் முதலியவை எழுதவேண்டும். பாடங்களின் சுருக்கத்தைமட்டும் எழுதல்போதாது. அது வகுப்பில் பயன்படுமளவுக்கு, எல்லா விபரங்களையும் தெரிந்து, தயாரித்து, எழுதவேண்டும். போதன குறிப்புகளை பாடசாலைக்கு எடுத்துச் செல்லவேண்டும். பாடக்குறிப்பு இல்லாமல் அனுபவ மிகுந்த ஆசிரியர்கள் தான் போதிக்க லாம். தலைமை ஆசிரியர் வாரா வாரம் பாடக்குறிப்புகளைச் சரிபார்த்துக் கையொப்பமிடவேண்டும். மொழி, கணக்கு மட்டுமல்லாது, உடற்பயிற்சி, சித்திரம் போன்ற எல்லா பாடங்களுக்கும் குறிப்புகள் எழுதப்படவேண்டும். ஒரே ஆசிரியர் பல வகுப்புகளுக்கு போதிக்கவேண்டியிருந்தால் ஒவ்வொரு வகுப்புக்கும் தனித்தனியே குறிப்புகள் எழுது தல் நலம். அப்போதுதான் ஞாபகமாக, தொடர்ச்சியாகப் பாடம் நடத்த முடியும். இரண்டு மூன்று வகுப்புகளுக்குப் பாடம் நடத்தும் ஆசிரியர் அதிகம் ஞாபக சக்தியுடைய

வராக இருக்கவேண்டும். பாடக்குறிப்புகள் தயாரிப்பதில் அந்த ஆசிரியர் அதிக நேரம் செலவழிக்கவேண்டும்.

4. பாடப் புத்தகங்களைப்பற்றி குறிப்பு வரைக:

பாடப் புத்தகங்களைப் புறக்கணிப்பதோ அல்லது கண்ணைமூடிக்கொண்டு பின்பற்றுவதோகூடாது. பாடப் புத்தகங்களை வழிகாட்டியாகக்கொண்டு, தனது போதனை திட்டத்துக்கு ஏற்றவாறு மாற்றிக்கொண்டு, கூடுதலையும் குறைகளையும் தமது பாடக்குறிப்பில் எழுதிக்கொள்ள வேண்டும். "புத்தகம் ஓர் ஊழியனே யொழிய எசமான னல்ல." பாடங்கள் வாழ்க்கையோடு தொடர்பு படுத்திப் போதிக்கப்படவேண்டும். மாணவர்களின் அறிவுக்கேற்ற வாறு புத்தகத்தின் நடையை மாற்றியும், உதாரணங்களைச் சேர்த்தும் போதிக்கலாம். பிள்ளைகளின் திறமைக்கும் பெற்றோர்களின் வசதிக்கும் அதிகமாகப் புத்தகங்கள் வைக்கக்கூடாது. கீழ் வகுப்புகளில் (1-2) தமிழ்ப்பாடப் புத்தகமும் பிறகு (3-ல்) கணிதமும், பிறகு (4-5) சமூகம், இயற்கைப்பாடம் போன்ற புத்தகங்களைச் சேர்த்துக் கொள்ளலாம். ஒரு பாடசாலையில் பல வகுப்புகளுக் கும் ஒரே கம்பெனியின் புத்தகங்களை வைப்பது நல்லது. கல்வி இலாகா அங்கீகரித்த புத்தகங்களைத்தான் வைக்க வேண்டும். கோடை விடுமுறையில் புத்தகங்களின் பட்டி யலை அறிவித்தால் பள்ளிதிறந்து மாணவர்கள் வரும் போது புத்தகங்ளோடு வரலாம். தாழ்த்தப் பட்டோர், முஸ்லீம், ஏழை மாணவர்களுக்கு, லேபர், போர்டு, முனிசி பல் பாடசாலைகளில் பொதுநிதியிலிருந்து புத்தகங்கள் இலவசமாக வாங்க அனுமதியுண்டு. புத்தகங்களை மாண வர்கள் பள்ளிகளிலேதான் உபயோகிக்கலாம். வீடு களுக்குப் புத்தகங்களை யெடுத்துச் சென்றால் அதனால் ஏற் படும் நஷ்டத்துக்கு ஆசிரியரே பொறுப்பாகிறார்.

5. கால அட்டவணை எவ்வாறு தயாரிக்கப்படவேண்டும்?

கால அட்டவணை தயாரிக்கும் போது 1. வகுப்பு ஆசிரி யர் முறை. பாட ஆசிரியர் முறை 2. பாடங்களில் கடின மானபாடங்கள், சுலபமான படங்கள் 3. மாணவர்களின் சுறுசுறுப்பு, மனோநிலை, 4. ஒரே ஆசிரியர் பல வகுப்புக்குப் போதித்தல் ஆகிய விஷயங்களை மனதிற்கொண்டு தயாரிக்கவேண்டும்.

ஒரு வகுப்புக்கு எல்லா பாடங்களையும் போதித்து வகுப்பு ஆஜர், சுத்தம், ஒழுங்கு முதலியனவற்றை ஒரே ஆசிரியர் கவனித்தால் அது "வகுப்பு ஆசிரியர் முறை"யாகும். ஒரு ஆசிரியர் ஒரே பாடத்தைப் பல வகுப்புகளில் போதிப்பது"பாட ஆசிரியர்முறை"யாகும். ஆரம்பப் பாடசாலைகளில் வகுப்பு ஆசிரியர் முறையே நல்லது. பாட ஆசிரியர் முறையில் பல ஆசிரியர்களுக்குள்ளும் ஒற்றுமை இருப்பதில்லை. பிள்ளைகளின் ஆஜர், சுத்தம், ஒழுங்குமுறை கவனிக்கப்படுவதில்லை. ஆகவே ஒவ்வொரு வகுப்புக்கும் ஒரு ஆசிரியர் நியமிப்பதே சிறந்த முறையாகும். அடுத்தபடியாக கால அட்டவணை போடும்போது முதல் 2 பீரியடுகளில் கடினபாடங்களும் மூன்ருவது நான்காவது பீரியடுகளில் சுலப பாடங்களும் அமையவேண்டும். வாய்மொழிப் பாடம், எழுத்துப்பாடம், தொழிற்பாடம் இவை மாறி மாறி வரவேண்டும். ஒவ்வொரு வகுப்புக்கும் ஒரு ஆசிரியர் இருந்தால் இதுபோல் செய்யலாம். ஒரு ஆசிரியர் 2 அல்லது 3 வகுப்புகளை நிர்வகிக்கும் போது இக்கொள்கைகளில் இருந்து மாறுபாடுகள் ஏற்படும். ஆனல் வேறுபாடுகளைக் கூடியவரை குறைக்க முயற்சிக்கலாம். ஒவ்வொரு பீரியடும் 40 நிமிடம் இருக்கவேண்டும்.

ஒரே ஆசிரியர் ஒன்றுக்கு மேற்பட்ட வகுப்புகளைப் போதிப்பது "பன்மை வகுப்பு போதனை"யாகும். போதிய மாணவர்கள் இல்லாத காரணத்தால் நம்நாட்டில் பெரும்பாலான பள்ளிகளில் இப்பன்மை வகுப்புப் போதனை நடைபெறுகிறது. இதனல் ஒழுங்கான போதனையும் மாணவர் தேர்ச்சியும் குறைகின்றன. கால அட்டவணை தயாரிப்பது சிறிது கடினம். ஒரு வகுப்புக்குப் பாடம் நடத்தும்போது மற்ற வகுப்புக்குக் கணிதம், எழுதுதல், கைவேலை போன்ற பாடங்கள் கொடுக்கலாம். கதை, பாட்டு, விளையாட்டுகளில் இரண்டு மூன்று வகுப்புகளும் சேர்ந்து கொள்ளலாம். பிள்ளைகள் செயயவேண்டிய வேலைகளைக் கரும்பலகையிலே எழுதிவைத்து, அமைதியைக்காக்க சட்டாம்பிள்ளைகளை உபயோகிக்கலாம். பன்மை வகுப்புப் போதனைக்கு ஆசிரியர் நன்கு தயாரித்துக்கொண்டு வரவேண்டும். வகுப்பு மாணவர் தலைவர்களைக்கொண்டு சில பொறுப்பான செயல்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். அப்பதவியை மாணவர்க்கு மாறி மாறிக்கொடுத்தால் மாணவர்களில் பலர் பயிற்சி பெறலாம். இன்னும் சிலர், கட்டடவசதி

யில்லாத இடங்களில் மாணவர்களை இரு பிரிவாகப் பிரித்து காலையிலே ஒரு பிரிவுக்கும் மாலையிலே ஒரு பிரிவுக்கும் பாடம் நடத்தலாம். காலையில் வேலைசெய்த ஆசிரியருக்கு மாலையில் வேலை கிடையாது. மேலேகண்ட கால அட்டவணைத் தத்துவங்களை நன்கு அறிந்து பிறகு அட்டவணை தயாரிக்கப்பட்டு கல்வி இலாகா அதிகாரிகளுக்கு மாதாவாரிப் பாடத்திட்டத்துடன் அனுப்பவேண்டும். ஆசிரியர் எப்போதும் கால அட்டவணையைப் பின்பற்றவேண்டும். அனுமதியில்லாமல் காலஅட்டவணையை மாற்றக்கூடாது.

6. உல்லாசப் பிரயாணத்தின் நன்மைகள் யாவை ?

(1) பொது அறிவு அதிகமாகிறது. (2) நேரடி அனுபவம், ஆராய்ச்சி, உற்றுநோக்குதல் நடைபெறுகின்றன. (3) நல்ல காற்றோட்டமுள்ள வெளிசஞ்சாரமும் குதூகலமும் தேக ஆரோக்கியத்துக்கு ஏற்றவை. (4) ஆசிரியரும் மாணவரும் நெருங்கிப்பழக வாய்ப்பு ஏற்படுகிறது. (5) இயற்கை அழகை ரசிப்பதால் கலை ஆர்வம் அதிகரிக்கும். (6) பிற்காலத்தில் பயமில்லாமல் தொலைவிடங்களுக்குப்பயணம் செய்யலாம்.

வகைகள் ; (1) வகுப்பு நேரத்தில் உலாவிவருதல்· வகுப்பு நேரத்தில் அருகேயுள்ள ரயில்வே நிலையம், கச்சேரி, நதிகள், குன்றுகள், வயல்கள், தோப்புகள், சரித்திர சம்பந்தமான கட்டடங்கள் இவைகளைப்பார்த்து வரலாம், இது சூழ்நிலையை அறிய உதவும். எல்லா வகுப்புகளும் செல்லமுடியாது. திடீரென கல்வி அதிகாரிகள் வரலாம். ஆகவே ஒரு ஆசிரியரும் அவர் வகுப்புகளும் பள்ளியில் இருக்கவேண்டும். மீதியுள்ளவர்கள் உலாவிவரலாம்.

(2) விடுமுறைநாட்களில் பயணங்கள் : 3 மைல்களுக்குள்ளாக உள்ள கிராமங்களுக்குச் சென்று மனித வாழ்க்கை சம்பந்தமான தொழில்களையும் விவசாயமுறைகளையும் போக்குவரவு சாதனங்களையும் பார்க்கலாம்.

(3) தொலைவிடப் பிரயாணம் : இதன் மூலமாகப் பல இடங்களைப் பார்க்கலாம். ரயிலிலும் வண்டியிலும் அதிக தூரம் சுமார் 8 அல்லது 10 நாட்கள் சென்று இயற்கை விநோதங்களையும், மக்களது பழக்க வழக்கங்களையும்,

தொழில்களையும், பெரிய நகரங்களையும், அணைக்கட்டுகளை யும் பார்த்து வரலாம். இது ஆரம்பப்பாடசாலைக்கு ஏற்ற தல்ல.

அமைக்கும் விதம்; பிரயாணம் போகுமுன் போகு மிடங்கள், நேரம், பார்க்கவேண்டியன முதலியவற்றை முதலில் அறியவேண்டும். பொது அறிவும் கல்வி அறிவும் பெருகவாய்ப்புகள் இருக்கவேண்டும். ஒரு ஆசிரியருக்கு 30 பிள்ளைகள் வீதம் அழைத்துச் செல்லலாம். சாமான் களைபத்திரப்படுத்தல், சிற்றுண்டிக்கு ஏற்பாடு செய்தல் போன்றவைகளையும் செய்யவேண்டும். மாணவர்கள் அவ் வப்போது பார்க்கும் விஷயங்களைக் குறித்துக் கொள்ள வேண்டும். பிரயாணம் முடிந்து வந்த பிறகு அதைப்பற்றி கட்டுரைகள் வரையச் சொல்லலாம். பிரயாணத்தின் போது கேட்கக்கூடிய சந்தேகங்களுக்கு ஆசிரியர் பொறுமை யாக விடையளிக்கவேண்டும்.

## 7. வீட்டு வேலையைப் பற்றி குறிப்பு வரைக: (Home work)

தீமைகள்: வீட்டு வேலை மாணவர்களது ஓய்வைக் கெடுக்கிறது. பள்ளியில் மூளைக்கு 5,6 மணி நேரம் வேலை கொடுக்கும் மாணவர் வீட்டிலும் வேலை செய்தால் களைப்பு ஏற்படும். சில வீடுகளில் வசதிகள் இருக்காது. சந்தேகம் வந்தால் தீர்ப்பதற்கு படித்தவர்கள் இருக்கமாட்டார்கள். ஆகவே, தவருகச் செய்வார்கள். தவருகச் செய்வதைவிடச் செய்யாமலிருப்பதே மேல் என்று சிலர் வீட்டு வேலைக்கு ஆட்சேபம் தெரிவிக்கிருர்கள்.

நன்மைகள்: இருந்தாலும் வீட்டிலுள்ள முழு நேரமும் ஓய்வுக்குத் தேவையில்லை. பிள்ளைகளின் வயதுக்கும் சக்திக் கும் ஏற்றவாறு வீட்டு அப்பியாசம் கொடுக்கலாம். பாட சாலையில் படித்தவற்றைத் திருப்பிப் பார்க்கவும் பூர்த்தி யாகாதவற்றைப் பூர்த்தி செய்யவும் வீட்டுவேலை உதவும். பிள்ளைகளின் சொல்லறிவு பெருகும். கையெழுத்துப் படியும், பாடங்களில் நன்கு தேர்ச்சியடைவார்கள்.

வீட்டுவேலைக்கு நிபந்தனைகள்: (1) வீட்டு அப்பியாசத் துக்கு தனி நோட்டுகள் போட்டு ஒழுங்காக வைக்கப்பட வேண்டும். (2) தினசரி ஆசிரியர் திருத்திக் கையெழுத்திட வேண்டும். (3) தினசரி மாணவர்கள் வீட்டு வேலையை

ஒழுங்காகச் செய்யவேண்டும். செய்யாத மாணவர்க்கு தண்டனை கொடுக்கலாம். (4) சுமார் ½ மணி நேரத்துக்கு மேல் வீட்டு வேலை இருக்கக் கூடாது. (5) பிள்ளைகளது அறிவுக்கேற்றவாறு, அவர்களே பிறர் உதவியின்றிச் செய்யக்கூடியதாக இருக்கவேண்டும். (6) கீழ் வகுப்புகளில் நேரடியாக விடை எழுதக் கூடியவையாகவும் மேல் வகுப்புகளில் யோசித்து விடையளிக்கக் கூடியவையாகவும் இருக்கவேண்டும்.

**பலவகைகள்:** *1. பார்த்து எழுதுதல் 2. வீட்டுக் கணக்கு 3. சித்திரம் வரைதல் 4. அச்சிட்ட சித்திரங்களைக் கத்தரித்துச் சேகரித்தல் 5. பலபொருள்களைத் (கைவேலை) தயாரித்தல். 6. கேள்விகளுக்கு விடை எழுதுதல்.*

**8. முதியோர் கல்வியைப் பற்றிக் குறிப்பு வரைக.**

உலக நாடுகளிலே நம்நாடு கல்வியைப் பொறுத்த வரையில் மிகவும் பின்தங்கியுள்ளது. 100க்கு 20-க்கும் குறைவாகவே கல்வி பயின்றவர்களாக இருக்கிறார்கள். நம் நாடு அரசியல், சமூகப் பொருளாதாரத் துறையிலே முன்னேற வேண்டுமானால் படிக்காத பெரியோர்களும், புத்தகங்களையும் பத்திரிகைகளையும் படிக்குமளவுக்காவது அறிவு பெற வேண்டும். ஆகவே சர்க்காரும் படித்த பொது மக்களும் முதியோர் கல்விக்காக ஆவன செய்யவேண்டும்.

**கல்வித் திட்டம்:** இளையவர்க்கான கல்வித்திட்டம் முதியோர்க்குப் பயன் படாது. ஆகவே அவர்களுக்கு இரவு நேரங்களிலும், விடுமுறை நாட்களிலும் பாடம் சொல்லித் தரலாம். இதற்காக அரசாங்கம் கிராண்ட் கொடுத்து பல பள்ளிகள் நடத்தினர். இவைகளில் போதிய ஆஜரில்லை. பெரியோர்கள் கல்வியின் அவசியத்தை அறியாததாலும் பகல் முழுவதும் உழைத்தவர்கள் இரவில் பள்ளிக்குவராமல் ஓய்வு எடுத்ததாலும் இம்முறை வெற்றி யளிக்கவில்லை. ஆகவே முதியோர்க் கல்விக்காகத் தனி ஆசிரியர்களுக்குத் தனிப்பயிற்சிக் கொடுத்து கிராமங்களில் முதியோர் பள்ளிகள் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். முதியோர் கல்விச் சங்கங்களும் நிறுவப்பட்டுள்ளன. முதியோர்ப் பள்ளிகள் ஆண்டுக்கு 200 நாட்களும், தினசரி 1½ மணி நேரமும் வேலை செய்யவேண்டும். முதியோர்ப் பள்ளிகளில் வேலை செய்யும்

பயிற்சி பெற்ற ஆசிரியர்க்கும் பள்ளிகளை நிர்வகிக்கும் நிர்வாகத்துக்கும் சர்க்கார் உதவித் தொகை யளிக்கிறது. இது தவிர புத்தகங்கள், படங்கள், செய்தித்தாள்கள் முதலியவை இலவசமாக வழங்கப்படுகின்றன.

சர்க்காரின் இம்முயற்சிகள் தவிர, பொதுமக்களும் முதியோர் கல்விக்குப் பல தொண்டுகள் செய்யவேண்டும். படித்தவர்கள் கிராமங்களில் கல்வியறிவில்லாதவர்க்கு சொல்லித்தரலாம். உயர் வகுப்பு மாணவர் விடுமுறை நாட்களில் பாடம் நடத்தலாம். கல்வியறிவு தவிர சுகாதார அறிவு, விஞ்ஞான அறிவு ஏற்படவும் வழி செய்யவேண்டும். வாசகசாலை, நூல் நிலையம், வானொலி, சினிமா, சொற்பொழிவுகள், போன்றவை முதியோர் கல்வியைப் பரப்பப், பெரிதும் துணை செய்யும்.

# 4. தேர்வுகள்.

1. தேர்வுகளும் அவற்றின் நோக்கமும்.

பிள்ளைகளின் தரத்தையும் தேர்ச்சியையும் அறிவதே தேர்வுகளின் முக்கியநோக்கமாகும். நடந்த பாடங்களில் கேள்விகள் கேட்டு மாணவர்களிடமிருந்து விடைகளை வரவழைத்தல் தேர்வு எனப்படும். பிள்ளைகளை மேல் வகுப்புக்கு மாற்றவும் தரம் பிரிக்கவும் தேர்வுகள் பயன்படும். தேர்வுகள் தேவையற்றவை என்று சிலர் வாதாடுகிறார்கள். "ஆசிரியரும் மாணவரும் தேர்வில் வெற்றி பெறுவதையே முக்கிய குறிக்கோளாகக் கொண்டு விஷய அறிவை மறந்துவிடுகிறார்கள்" என்று காரணம் கூறுகிறார்கள். என்றாலும் முறையோடு நடத்தப்படும் தேர்வுகள் அவசியம் என்பதை யாரும் மறுக்கவில்லை.

தேர்வுகளின் வகைகள் ; (i) எழுத்துப் பரீட்சை காலாண்டு, அரையாண்டு, முழு ஆண்டு என்று எழுத்துத் தேர்வுகள் 3 முறை நடைபெறுகின்றன. இம் மூன்று தேர்வுகளில் மாணவர்கள் பெறும் அம்சங்களைக்கொண்டு வெற்றிகள் அறிவிக்கப் படுகின்றன. ஆரம்பப் பாடசாலைகளில் எழுத்துப் பரிட்சைகள் குறைக்கப்படவேண்டும். முன்பு கட்டுரை மாதிரி விடையெழுதும் படியான வினாக்கள்

கொடுக்கப்பட்டன. தற்போது சுருக்கமாக விடை வரவழைக்கும் புதுமாதிரி வினாக்கள் தரப்படுகின்றன. புதுமாதிரி கேள்விகளின் வகைகள் : (அ) ஏதேனும் நான்கு விடைகள் கொடுத்து பொருத்தமான ஒன்றைக் குறிப்பிடுவது. (உ-ம்) இந்தியாவில் அதிக மழை பெய்யுமிடம் (a) சிரபுஞ்சி (b) சென்னை (c) பம்பாய் (d) ராஜபுதனம் விடை [a]

(ஆ) கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்க ! இந்தியா குடியரசான வருடம்—(1950)

(இ) சிறு சிறு வாக்கியங்களில் அல்லது வார்த்தைகளால் விடைகூறு.

1. இந்தியாவின் பிரதம மந்திரி யார் ? (ஜவஹர்லால் நேரு)

2. மௌரியவம்சம் உருக்குலைய முக்கிய காரணம் என்ன ? (அசோகர் புத்தமதத்தில் நாட்டம் செலுத்தி படைபலத்தை விருத்திசெய்யவில்லை )

(ஈ) சரியா (✓) தவறு (×)

இந்தியாவின் தலைநகரம் பம்பாய் (×)
உலகிலேயே பெரிய மலைச்சிகரம் எவரெஸ்ட் (✓)

(2) பொருத்துக ;

| | |
|---|---|
| 1. வள்ளுவர் | கலிங்கத்துப்பரணி (4) |
| 2. இளங்கோ | குறள் (1) |
| 3. பாரதியார் | சிலப்பதிகாரம் (2) |
| 4. செயங்கொண்டார் | பாஞ்சாலிசபதம் (3) |

பிள்ளைகளின் விடைகளைக் கவனமாகத்திருத்துவது ஆசிரியரின் வேலை. பிழைகளைக் குறித்தால் மீண்டும் மாணவர்கள் செய்யாமல் இருப்பார்கள். கருத்துப் பிழைகள், இலக்கண, மொழிப் பிழைகள் என இருவகையாகப் பிரித்து குறிக்கப்படவேண்டும்.

பழைய தேர்வுக்கும் புதிய தேர்வுக்குமுள்ள வேறுபாடுகள்.

| பழைய மாதிரி | | புதிய மாதிரி |
|---|---|---|
| 1. கேள்விகள் குறிப்பது எளிது | — | எளிதல்ல. |
| 2. மொழியறிவையும், கட்டுரைபோல் எழுதவும் பயிற்சியளிக்கிறது. | } | அத்தகைய பயிற்சிக்கு இடமில்லை |
| 3. விடையைத் திருத்துவது அரிது | — | எளிது. |
| 4. ஒரு பகுதியை ஒதுக்கி விட்டு ஒரு பகுதியை நெட்டுருப் போட்டுத் தேறிவிட வாய்ப்பு உண்டு. | } | எல்லா பகுதிகளிலும் சிறிய சிறிய கேள்விகள் கேட்கப்படுவதால் பகுதியை ஒதுக்க முடியாது. |
| 5. மதிப்பீடு ஒரே தன்மையாக இல்லாமல் மாறுபடும். | } | மதிப்பீடு ஒரே தன்மையாக இருக்கும். |

வாய்மொழித் தேர்வு: வகுப்புகளில் அடிக்கடி கேள்விகள் கேட்பதன் மூலம் வாய்மொழிப் பரிட்சைகள் நடத்தலாம். ஒப்புவித்தல், மனக்கணக்கு, ஒரு விஷயத்தைக் குறித்துப் பேசுதல் இவை வாய்மொழிப் பரிட்சையின் வகைகளாகும்:

நுண்ணறிவு : மனிதனுக்கு இயற்கையாகவே பிறவியிலேயே, பெற்றோரிடமிருந்து கிடைக்கும் அறிவு நுண்ணறிவு ஆகும்.

மாணவர்களைத் தரம் பிரித்தல்; ஒரு வகுப்பில் அதிக அறிவுள்ள மாணவர்கள், நடுத்தர அறிவுள்ள மாணவர்கள், பிற்போக்கான மாணவர்கள் என 3 வகையுண்டு. சாதாரணமாக எல்லோருக்கும் பொதுவாக கவனம் செலுத்த வேண்டும். ஒரு வகுப்பில் 40 பிள்ளைகளுக்கு மேலிருந்தால் ஆசிரியர் மாணவர்களைக் கவனிக்கமுடியாது. ஆண்டு இறுதியில் மாணவர்கள் வாங்குகிறமார்க்குகளைக் கொண்டு குறித்த சதவீதம் மார்க்கு பெற்றவர்களை மேல்வகுப்புக்கு மாற்றியும் மார்க்கு வாங்காத மாணவர்களை அதேவகுப்பில் தேக்கியும் வைக்கிறார்கள். தேக்கத்துக்குரிய காரணங்களை ஆசிரியர் போக்கவேண்டும்.

ஆரம்பப் பாடசாலைகளில் ½ வருஷ வகுப்பு மாற்றல் செய்யலாம். 6 மாதங்கள் முதல் வகுப்பில் படிக்கும் மாணவன் மிகுந்த கெட்டிக்காரனாக இருந்தால் அவனை உடனே 2-ம் வகுப்பில் சேர்த்துவிடலாம். அதிலும் கெட்டிக்காரனாக இருந்தால் ஆண்டு இறுதியில் 3-ம் வகுப்பில் சேர்த்துவிடலாம். அதிக அறிவுக்கூர்மையுள்ள மாணவரே ½ வருஷ வகுப்பு மாற்றலுக்குத்தகுந்தவராவார்.

ஒரு வகுப்பில் படிக்கும் மாணவனை ஒரு ஆண்டு முடிந்ததும் ஒரு வகுப்பு விட்டு அடுத்த மேல் வகுப்புக்கு மாற்றுவது இரட்டை பிரமோஷன் ஆகும். இதனால் 1 வகுப்பு பூராவும் இல்லாமல் போய்விடுகிறது. இதை டெபுடி இன்ஸ்பெக்டரது முன் அனுமதி பெற்றே செய்யவேண்டும். இது அவ்வளவு நல்லதல்ல. இதைவிட அரைவருஷ பிரமோஷன் சிறந்தது.

மாணவர்களது தேர்ச்சியை அறிய ஆசிரியர், மார்க்குப் புத்தகம், பிரமோஷன் ஜாபிதா, தேர்ச்சி அறிக்கை முதலியவைகளை ஒழுங்காகப் பதிவு செய்து வரவேண்டும்.

# 5. ஒழுங்குமுறை.

*1.* ஒழுங்கு முறையின் அவசியம்.

ஓர் ஒழுங்கு முறையிருந்தால்தான் எந்தக்காரியமும் நன்கு நடைபெறும். பாடசாலையிலும் ஒழுங்கு இருந்தால் தான் கல்வி கற்பிக்கமுடியும். ஆசிரியரும் மாணவரும் பாடசாலை விதிகளுக்குக் கட்டுப்பட்டு ஒழுங்காக நடக்கவேண்டும். ஒவ்வொருவரும் தங்களிஷ்டம் போல் காரியம் செய்தால் வேலை சரிவர நடைபெறாது. சட்டதிட்டங்களுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் அடங்கி நடப்பதே ஒழுங்கு முறையாகும். பிற்கால வாழ்க்கைக்கும் மாணவர்க்கு ஒழுங்கு முறைப் பயிற்சி அவசியம்.

ஒழுங்கு முறைகள்: (i) குறித்த நேரத்தில் பள்ளிக்கு வருதல் (ii) உடல், உடைச் சுத்தம் (iii) பாடசாலைச் சாமான்களைப்பற்றிய பொறுப்பு (iv) ஒழுங்குத் தன்மை (v) நடத்தை முறை (vi) படிப்பில் கவனமும் வீண் நேரம்

போக்காமையும் (vii) விளையாடுவதில் ஒழுங்குமுறை முதலியன. இவை பெரும்பாலும் நீதிநெறியை யொட்டியும், நற்பழக்கம் உண்டுபண்ணும் முறையிலும், சுலபமாகப் பின்பற்றக்கூடிய முறையிலும் இருக்கவேண்டும். அன்பும் ஆதரவும் காட்டி ஒழுங்கு முறைகளைப் பின்பற்றச் செய்ய வேண்டும். நற்புத்தி புகட்டியும் அவசியப்பட்டால் தண்டனை, வெகுமதிகொடுத்தும் பின்பற்றச் செய்யலாம்.

2. தண்டனைகள்:

எக்காரணம் கொண்டும் சரீரசம்பந்தமான கடுந்தண்டனைகள் கொடுக்கக்கூடாது என்பது தற்போதைய சட்டம். ஆகவே (1) அவமானமென்று பிள்ளைகள் நினைக்கும்படி கறுப்புப்புள்ளி கொடுத்தல் (2) பலமுறை எழுதச் சொல்லுதல் (imposition) (3) பள்ளி முடிந்து சிறிது நேரம் சென்று வீடுபோகச் சொல்லுதல் (4) உயர்நிலைப் பள்ளிகளில் அபராதம் விதித்தல் (5) தற்காலீகமாக நீக்கிவைத்தல்.(suspension) (6) பாடசாலையை விட்டு நீக்குதல்போன்ற தண்டனைகளை சமயத்துக்கேற்றாற்போலக் கொடுக்கலாம்.

தண்டனையின் நோக்கம் பழிவாங்குவதாகவும் வஞ்சம் தீர்ப்பதாகவும் இருக்கக்கூடாது. பிள்ளைகள் தங்கள் தவறை உணர்ந்து திருந்தி மீண்டும் தவறிழைக்காமலிருக்க வேண்டும். மிகுந்த அவமானமுண்டாக்கும் தண்டனைகள் மாணவனது உற்சாகத்தைக் கெடுக்கும். தண்டனைகள் பிறருக்கும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

3. வெகுமதிகள்:

தவறு செய்த பிள்ளைகளுக்குத் தண்டனை கொடுப்பது போலவே நன்னடத்தையுள்ளவர்களுக்கும், அதிக மார்க்குகள் வாங்கியவர்களுக்கும் பரிசுகள் கொடுக்கலாம். பிள்ளைகளின் நடத்தை, வருகைப்பதிவு, பாடங்களின் மார்க், வீரச்செயல்கள், இவைகளுக்குப் பரிசுகள் வழங்கலாம். பொறாமைக்கு இடங்கொடுக்கக்கூடாது. வெற்றி பெற்றவன் கர்வமும் தோற்றவன் அவமானமும் அடையும்படி போட்டிகள் இருக்கக்கூடாது. பரிசை அடையும் முறைகள் நேர்மையானதாக இருக்கவேண்டும். "பரிசினால் பெறும் புகழ்தான் பெரிதேயொழிய பணமதிப்பு அல்ல" என்று

மாணவர்கள் உணரவேண்டும். தன் முயற்சி, சுயஅறிவு, நன்னடத்தை, கல்வித்திறன் ஆகியவைகளைப் பரிசுகள் அபிவிருத்தியடையச் செய்யும். தனிப்பட்ட மாணவர்களிடையே போட்டிகளைக்காட்டிலும் குழுக்களிடையே போட்டிகள் ஏற்படுத்துவது நலம். (1) அதிக விலையில்லாத, பிள்ளைகளுக்கு உபயோகப்படக்கூடிய புத்தங்கள், பேனு, பெல்ட் முதலிய பொருள்கள் (2) நற்சாட்சிப் பத்திரங்கள் (3) கௌரவ போர்டில் பெயரை எழுதுதல் (4) வகுப்பில் காலை அஸெம்பிளியில் புகழுதல் (5) கௌரவமான பொறுப்புள்ள பதவிகள் கொடுத்தல் முதலியவை வெகுமதிகளின் பலவகைகளாகும்.

**4. ஒழுங்கீனங்களும் அவற்றைத் திருத்துவதும் :**

மாணவர்களின் ஒழுங்கீனங்களைக் கண்டறிந்து, குற்றங்களை யுணரும்படி நற்புத்தி புகட்டி கூடுமானவரையில் தண்டனையின்றி திருத்துவது ஆசிரியரது கடமையாகும்.

1. வேண்டுமென்றே ஏமாற்றுவதற்காகப் பொய் சொல்லுபவர்களைக் கடுமையாகத் தண்டிக்கவேண்டும். அறியாமலும் பயத்தின் காரணமாகவும் பொய்பேசுபவர்களிடம் அன்பு காட்டித்திருத்தவேண்டும்.

2. பிற குழந்தைகளின் மேல் கோள் சொல்லும் பிள்ளைக்கு ஆசிரியர் காதுகொடுக்கக்கூடாது. கோள் சொல்லுதல் தவறு என்று கூறித்திருத்தவேண்டும்.

3. பரிட்சைகளில் பிறரைப் பார்த்து எழுதும் குழந்தைகளை நன்கு படிக்கச் சொல்லவேண்டும். காப்பி அடிக்காவண்ணம் தொலைவில் உட்காரவைக்கவேண்டும். அதனுல் அம்மாணவருக்கும் பள்ளிக்கும் கெட்டபெயர் உண்டாகும் என்று கூறவேண்டும்.

4. அறியாமையாலும், கோழைத்தனத்தாலும், பயத்தாலும், கடுமையான கோபத்தாலும் பிடிவாதமாக இருக்கும் மாணவர்களிடம் ஆசிரியர் அன்புகாட்டி நன்கு பழகினுல் பிடிவாதத்தைப் போக்கலாம்,

5. பள்ளி சட்டதிட்டங்கள் கடுமையாக இருந்தாலும், ஆசிரியரிடம் பயம், வெறுப்பு ஏற்பட்டாலும் மாணவர்கள் பள்ளிக்கு ஒழுங்காக வரமாட்டார்கள். இக்குறைகளைப்போக்கி, பள்ளியை உற்சாகமுள்ள இடமாக மாற்ற வேண்டும்.

6. இவை தவிர வேறு கெட்ட நண்பர்கள், கெட்ட பழக்கங்கள் ஏற்படா வண்ணமும், வகுப்பில் நன்கு கவனத்தோடு பாடங்களைக் கவனிக்குமாறும் ஆசிரியர் பார்த்துக் கொள்ளவேண்டும்.

7. எல்லாவற்றையும்விட மேலாக ஆசிரியர் மாணவனது உடல் சுகாதாரத்தையும் தினசரி கவனிக்கவேண்டும். பல், முகம், கைகால், நகம், தலை, முதலிய எல்லா அவயவங்களும் சுத்தமாக இருக்கவேண்டும். ஒழுங்கில்லாத மாணவர்களைச் சீர்திருத்தவேண்டும்.

5. நேரந்தவறிப் பள்ளிக்கு வருவதைத் தடுத்தல் :

பிள்ளைகள் நேரந்தவறிப் பள்ளிக்கு வருவதால் கல்வி அபிவிருத்தி தடைபடுகிறது. ஆகவே பிள்ளைகள் குறித்த காலத்தில் வருமாறு வற்புறுத்தவேண்டும்.

1. ஆஜர் விஷயத்தில் ஆசிரியர்கள் கண்டிப்பாக இருக்கவேண்டும். முதல் பீரியடு முடிவதற்குள் ஆஜர்முடிக்க வேண்டும். அவ்விதம் செய்யாத ஆசிரியரின் மீது தக்க நடவடிக்கை யெடுக்கவேண்டும். (2) நேரந்தவறி வருபவர்களைப் பற்றிப் பெற்றோருக்கு அறிவிக்கலாம். (3) குறித்த காலத்தில் வருபவருக்கு சிறு பரிசுகள் அளித்து உற்சாகப் படுத்தலாம். (4) நேரங்கழித்து வருபவர்களை சிறிது நேரம் வெளியே நிற்கவைக்கலாம். (5) ஆசிரியர் எப்பொழுதும் எல்லா வேலைகளுக்கும் குறித்த காலத்தில் வந்து மாணவர்க்கு வழிகாட்டியாக இருக்கவேண்டும். (6) கதைகள் மூலம் நேரந்தவறி வருவதால் ஏற்படும் விளைவுகளைக் கூறித் திருத்தலாம்.

6. சில நல்ல பழக்கங்கள் :

(i) புகைவண்டி நிலையங்களிலும், கூட்டங்களிலும், திருவிழாக்காலங்களிலும், திருட்டு, கலாட்டா நடைபெருமலிருக்க கியூ முறையை அனுசரிக்கிறோம், பள்ளிகளிலேயே

பிள்ளைகளுக்கு இந்த பழக்கம் கொடுப்பது அவசியம். வகுப்புவிட்டு வகுப்பு மாறும்போதும், விளையாடச் செல்லும் போதும் காலை இறைவணக்கம் முடிந்து வகுப்புக்குச் செல்லும் போதும் கியூ முறையை அனுசரிக்கலாம். (ii) தினசரிக்கூட்டம் ; தினசரி காலை வகுப்பு துவங்குமுன், எல்லா மாணவர்களும் வகுப்பு வாரியாக வரிசையாக நின்று இறை வணக்கம் நடைபெறும். தலைமை ஆசிரியரும் மற்ற ஆசிரியர்களும் வரவேண்டும். ஏதேனும் அறிவிக்கவேண்டியிருந்தால் அறிவித்தவுடன், 5 நிமிடம் ஏதேனும் பேசலாம். பிள்ளைகளுக்கு நீதிபோதிக்கலாம். பத்திரிகைச் செய்தி ஏதேனும் கூறலாம். பள்ளியிலுள்ள எல்லாமாணவர்களும் ஆசிரியர்களும் தினசரி கூட ஓர் வாய்ப்பு ஏற்படுகிறது. அமைதி, ஒழுங்கு முதலிய பயிற்சி கிடைக்கிறது. சில அறிவுரைகளைக் கேட்கும் வாய்ப்பும் ஏற்படுகிறது. (iii) பிள்ளைகளின் வயது, திறமை இவற்றிற்கேற்றவாறு கட்சிகளாகப் பிரித்து, குழுவுணர்ச்சியை வளர்க்கலாம். போட்டி, விளையாட்டுகள், வேலையிடுதல் முதலியன நடத்தலாம். குழுவோடு ஒத்துழைத்தும், விட்டுக்கொடுத்தும், பொறுப்பேற்றும், மாணவர்கள் நடத்துவதால் சிறந்த பயிற்சி கிடைக்கிறது. தன்னடக்கம் அமைந்து பிற்கால வாழ்க்கையில் சமூகத்தோடு ஒட்டிவாழும் பண்பு வளர்கிறது. (iv) வீட்டுமுறை (அ) ஹவுஸ் ஸிஸ்டம்; பள்ளி மாணவர்களை பலவீடுகளாகப் பிரித்து, ஒவ்வொரு வீட்டுக்கும் ஒரு தலைவர், காரியதரிசி முதலியவரைத் தேர்ந்தெடுக்கலாம். ஒவ்வொரு வீடும் ஒரு ஆசிரியர் கண்காணிப்பிலிருக்க வேண்டும். பள்ளிகளில் நடைபெறும் போட்டிகள் வீடுகளின் அடிப்படையிலே நடைபெறவேண்டும், ஒவ்வொரு வீட்டிற்கும் ஒரு பெயர் கொடுக்கவேண்டும். இதனால் சுயஉணர்ச்சி, குழுஉணர்ச்சி, வாழ்க்கை அனுபவமும் ஏற்படுகிறது.

### 7. மாணவர் சுய ஆட்சி முறை :

ஆசிரியர்கள் தகுந்த மாணவர்களிடம் சில பொறுப்புகளைக் கொடுத்து, தலைமையேற்று நடத்தச் செய்யவேண்டும். மற்ற மாணவர்கள் தலைவர்க்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். இத்தலைவர்களை ஆசிரியர்கள் எப்போதும் கண்காணித்து உதவிசெய்யவேண்டும். பள்ளித்தலைவன், வகுப்புத் தலைவன், விளையாட்டுக் குழுத்தலைவன், போன்ற பல தலைவர்கள் இருக்கலாம்,

தற்காலத்தில் மாணவர்கள் சுயாட்சிமுறை எங்கும் வற்புறுத்தப்பட்டு வருகிறது. மாணவர்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட தலைவர்களும், ஆசிரியர்களும் சேர்ந்து பள்ளியின் முன்னேற்றத்தையும் நீதிநெறியையும் கவனிக் கலாம். இதனால் (1) ஆசிரியர்—மாணவர் ஒற்றுமை வலு வடையும். (2) பள்ளியிலே ஆட்சி செய்துபழகும் பயிற்சி பிற்கால சமூக வாழ்க்கையிலும் பயனளிக்கும். (3) மாண வர் நீதிமன்றம் மூலமாக குற்றஞ் செய்தமாணவனைத் தண்டிப்பது ஒரு நவீனமுறை. இதனால் மாணவர் நீதியை யும் நன்கு கற்கின்றனர் (4) எந்த ஒரு விஷயத்தையும் தாங்களே யோசித்து, ஆலோசித்து பரிசீலனை செய்வதால் பொறுப்பையுணர்ந்து கடமையாற்றும் பயிற்சி ஏற்படு கிறது.

இதனால் சில தீமைகளும் உள்ளன. (1) சில சமயங் களில் தகுதியற்றவன் தேர்ந்தெடுக்கப்படலாம். (2) தண் டனை கடுமையாகிவிடக்கூடும் (3) ஆசிரியர்கள் தங்கள் அதிகாரங்களைக் குறைத்துக்கொள்ள விரும்பாமலிருக் கலாம் (4) பொறுப்பைச் சரிவர உணராவிடில் சில நேரங் களில் விபரீத விளைவுகள் ஏற்படும்.

8, ஓய்வு நேர வேலைகள் :

ஓய்வு நேரங்களிலும், விடுமுறை நாட்களிலும் மாண வர்கள் தங்கள் அறிவு, திறமை, விருப்பம் இவற்றிற்கேற்ற வாறு ஏதாவது தொழிலைச் செய்யலாம். அது “ஓய்வு நேர இஷ்டவேலை” (Hobby) எனப்படும். சங்கீதம், நூற்பு, புக் பைண்டிங், கதை கட்டுரை எழுதுதல், போட்டோ எடுத்தல், முதலியன சில வேலைகளாகும். பொது அறிவு விருத்தி யடையும். வேலையில் தேர்ச்சி ஏற்படும். ஓய்வு நேரம் பயனுள்ள முறையில் செலவழியும்.

இவைதவிர, விளையாட்டு, நாடகம், பள்ளிவிழாக்கள், கண்காட்சி, உல்லாசப் பிரயாணம், சாரணரியக்கம், செஞ் சிலுவைச் சங்கம், கூட்டுறவுச் சங்கம், சமூகசேவைச் சங்கம், மாணவர் சங்கம், இலக்கிய மன்றம் போன்றவை களையும் பங்கேற்று நடத்துமாறு செய்யவேண்டும். ஆனால் இவ்வேலைகள், பிள்ளைகளின் தினசரிவகுப்புப் பாடங்கள் படிப்பதற்கு இடையூறு இல்லாமலிருக்கவேண்டும்,

(1) பாடபோதனைக்கு உதவியாக இருக்கும்.

(2) பள்ளிக்கு நல்லபெயரும் புகழும் உண்டாகும்.

(3) தனித்திறமைகளை விருத்தி செய்யும்.

(4) ஓய்வு நேரம் இன்பமாகக் கழியும்

(5) பொறுப்பு, கட்டுப்பாடு, உற்சாகம் ஆகியவை உண்டாகின்றன.

9. கூட்டுறவுச் சங்கம்:

இச் சங்கம் நடத்த அலாதி திறமையும் அனுபவமும் தேவை. கூட்டுறவு இலாகா அதிகாரிகளின் உதவியைக் கொண்டே நிறுவப்படவேண்டும். அவ்வப்போது தேவையான ஆலோசனைகளைக் கேட்டுக்கொள்ள வேண்டும். இச் சங்கத்தினால் பொருள் இலாபம் கிடைப்பது தவிர, பொறுப்பும் தொழில் முறைப் பயிற்சியும் கிடைக்கிறது. கூட்டுறவு இலாகா விதிகளின் கீழ் சங்கம் பதிவுசெய்யப்படவேண்டும். ஷை விதிகளைப் பின்பற்றவேண்டும். சிக்கனமாக இருக்கவேண்டும். மாணவர்களது தேவைகளைக் கூடிய வரை பூர்த்தி செய்யவேண்டும். கூட்டுறவின் நன்மைகளைக் கூடியவரைப் பரப்பவேண்டும்.

10. சாரண இயக்கம்: பிரிவுகள்.

7—11 வயது. சிறுவர்களுக்கு இளம்சாரணர் பயிற்சி.
,, சிறுமிகளுக்கு இளம் சாரணீயப் பயிற்சி.

11—17 வயது. பையன்களுக்கு சாரணர் பயிற்சி,
,, பெண்களுக்கு சாரணீயப் பயிற்சி

17வயதுக்குமேல் வாலிபர்களுக்கு "ரோவர்" பயிற்சி
பெண்களுக்கு "ரேஞ்சர்" பயிற்சி

ஆரம்பப்பாடசாலைகளில் (7-11) இளம் சாரண, சாரணீயப் பயிற்சியே முக்கியம். நன்மைகள் (1) எல்லோரையும் சகோதரபாசத்துடன் நேசிப்பது. (2) பிறருக்கு எந்த நேரத்திலும் சேவை செய்வதையே குறிக்கோளாகக் கொள்வது. (3) துணிவுடனும் மனோதைரியத்துடனும் செயலாற்றுவது.

மாநிலத்திலுள்ள சாரணர் தலைமை அலுவலகத்திலிருந்தும், மாவட்டக் கழகத்திலிருந்தும் அனுமதி முதலிய விவரங்கள் பெற்று ஆசிரியர்களை முதலில் பயிற்சிக்கு அனுப்பி, பிறகு மாணவர்க்குப் பயிற்சி கொடுக்கலாம்.

## 11. செஞ்சிலுவைச் சங்கம்

1864-ல் ஸ்விட்சர்லாந்து நாட்டின் தலைநகராகிய ஜினீவாவில் செஞ்சிலுவைச் சங்கத்தின் முதல் கூட்டம் கூடிற்று. வெள்ளை நிறத்தில் சிகப்பு சிலுவையைத்தன் கொடியாகக் கொண்டிருப்பதால் செஞ்சிலுவைச் சங்கம் எனப்பெயர் பெற்றது. இதன் முக்கிய நோக்கம் போர்க் களங்களில் காயம் பட்டுக் கிடப்பவருக்கு பகை, அயல், நட்பு என்ற வேறுபாடின்றி பணியாற்றுவதாகும். இது ஒரு சர்வதேச சங்கம். இது நாடு, கட்சி, மதம் இவைகளுக்கு அப்பாற்பட்டது. இதன் கொடி பறக்கும் இடங்கள் பொது இடங்கள். ஆகவே அங்கு குண்டு மாரியோ வேறெவ் விதமான போர்க் கருவியையோ வீசுவதோ கூடாது. இச் சங்கத்தைச் சேர்ந்து பணிபுரிபவர்கள் செஞ்சிலுவை அடையாளம் அணியவேண்டும்.

1914-ம் ஆண்டில் நடைபெற்ற உலகப் போரில் சிறுவர், சிறுமிகளுக்கும் செஞ்சிலுவைச் சங்கம் பயிற்சி கொடுத்து பணிபுரியச் செய்தது, அதுமுதல் "சிறுவர் செஞ்சிலுவைச் சங்கம்" நிறுவப்பட்டது. இதில் 18 வயதுக்குட்பட்டவர் சேரலாம்.

மாகாண செஞ்சிலுவைச் சங்கத்தில் பதிவுசெய்து கொண்டு ஒவ்வொரு பள்ளியும் அங்கத்தினராகக் குறிப்பிட்ட தொகையை ஆண்டுக்கு ஒருமுறை சந்தாவாக செலுத்தலாம். இச்சங்கத்திற்கு ஒரு ஆசிரியர் தலைவராகவும் சில மாணவர்கள் உறுப்பினராகவும் இருந்து பணியாற்றலாம்.

வேலைகள் : (1) எல்லா நாட்டினருடனும் நட்பு கொள்ளுதல். (2) நோயாளிகளுக்கும் ஆபத்திலுள்ளவர்களுக்கும் உதவி புரிதல். (3) சிறந்த பழக்க வழக்கங்களைக் கையாளுதல் (4) செஞ்சிலுவைச் சங்க சம்பந்தமான பத்திரிகைகள் நடத்தலாம். (5) பிறநாடுகளில் வெள்ளம், தீ, போர் போன்ற காலங்களில் ஏற்படும் சேதங்களுக்கு நிவாரணம் (உணவு, உடை, பணம்) அளித்தல்.

# 6. ஆசிரியரும் கடமைகளும்

1. தலைமை ஆசிரியர்:

பள்ளிக்குத் தலைவர் இவரே. குடும்பத்தலைவர் எவ்வாறு அனைவருடனும் ஒற்றுமையோடு பழகி செயலாற்றுவாரோ அதுபோலவே தலைமையாசிரியரும் பள்ளியின் முழு வளர்ச்சிக்கும் பாடுபடுகிறார். நிர்வாகி, ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஆகிய அனைவருக்கும் பொறுப்பாளியாகி, பள்ளியின் முன்னேற்றம், நன்மதிப்பு, ஒழுங்குமுறை முதலிய அனைத்துக்கும் முயற்சி செய்கிறார்.

குணங்கள்: (1) பொறுப்பான பதவியை வகிப்பவராதலால் பேரறிவு படைத்தவராக இருக்கவேண்டும். (2) பலரோடு பழகுவதால் அன்பு, சாந்தம், பாரபட்சமின்மை முதலிய குணங்கள் இருக்க வேண்டும். (3) எல்லாவற்றையும்விட நேர்மை, நன்னடைத்தையுடையவராக இருக்கவேண்டும். (4) கம்பீரமான தோற்றம் இருக்கவேண்டும். (5) தன்னம்பிக்கை இருக்க வேண்டும். (6) நிர்வாகத் திறமையிருக்கவேண்டும். (7) ஆசிரியருள்ளும், மாணவருள்ளும், சாதி, மத, பண வேறுபாடு காரணமாக பாரபட்சம் காட்டக்கூடாது. (8) பிறரைக் கண்டிக்கும்போது சீர்திருத்தும் நோக்கத்தோடு கண்டிக்கவேண்டும். பலருக்கு முன்னால் கண்டிக்கக்கூடாது. (9) அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யக்கூடாது.

கடமைகள்; (1) ஓரிரண்டு வகுப்புகளுக்கு பாடபோதனை செய்யலாம். மற்ற ஆசிரியர்களைப் போல் அதிகநேரம் கற்பிக்கமுடியாது. (2) மேற்பார்வையிடல் முக்கியமான வேலையாகும். ஆசிரியர்கள் வருகை, பாடக்குறிப்புச் சுவடி, பாடம் நடத்தும் விதம் இவற்றை மேற்பார்வையிட்டு அதற்கென உள்ள நோட்டில் குறிப்பு எழுதிக்கொள்ளவேண்டும். மாணவர்களது ஆஜர், ஒழுக்கம் முதலியவற்றை மேற்பார்வையிடலாம். இவைதவிர, தோட்டவேலை; உடற்பயிற்சி வகுப்புகளையும், உணவு விடுதிவேலையையும் மேற்பார்வையிடலாம். (3) பாடசாலை ரிஜிஸ்தர்களின் பாதுகாப்பு (4) கடிதப்போக்குவரத்து, (5) வரவு செலவுக் கணக்கு வைத்தல் (6) பாடப்புத்தகங்களைத் தேர்ந்தெடுத்தல். (7) பிள்ளைகளைச் சேர்த்தல். (8) கால அட்டவணை,

மாதவாரி பாடத்திட்டம் தயாரித்தல் (9) பள்ளிக்கட்டடம் சாமான்கள், உபகரணங்கள் இவற்றிற்கும் இவரே பொறுப்பாளி. (10) தேர்வுகள் நடத்துவதும் வகுப்பு மாற்றுவதும் இவரது முக்கியமான கடமைகளாகும்.

(2) ஆசிரியர்களின் குணங்கள்.

(1) தலைமை ஆசிரியருக்கு எப்போதும் உதவியாக இருக்கவேண்டும். (2) மாணவர்க்கு சிறந்த வழிகாட்டியாக இருக்கவேண்டும் (3) மாணவரின் தன்மையறிந்து அவர்களோடு அன்பாகப் பழகவேண்டும் (4) கற்பிக்கும் விஷயத்தில் அறிவு நிறைய உடையவராக இருக்கவேண்டும். (5) ஒழுக்கம், அன்பு நிறைய இருக்கவேண்டும். (6) மாணவர்களின் முன்னேற்றத்திலே கருத்து செலுத்தவேண்டும். (7) தன்னம்பிக்கையும் உலக அறிவும் இருக்கவேண்டும்.

கடமைகள்: (1) கற்பிக்கப் போகும் பாடங்களை நன்கு படித்து, சிந்தித்து, தயாரித்துக் கொண்டு பள்ளிக்குப்போக வேண்டும். (2) வாராவாரம் பாடக்குறிப்பு தயாரிக்க வேண்டும் (3) மாதாந்திர பாடத்திட்டத்தையும் கால அட்டவணையையும் பின்பற்றவேண்டும். (4) பாடபோதனைக்குத் தேவையான உபகரணங்கள் தயாரிக்கவேண்டும். (5) ஆசிரியர் பொதுமக்களுக்கும் தொண்டு செய்யவேண்டும். (6) தாய்மொழிக்கும் தாய்நாட்டுக்கும் எப்போதும் சேவை செய்யத்தயாராக இருக்கவேண்டும்.

3. ஆசிரியர் அறிவு வளர்ச்சி:

(1) நூல்நிலையங்களிலுள்ள புத்தகங்களைப் படிப்பது மூலம் அறிவு விருத்தியடையும். செய்தித்தாள்கள் வாசிப்பது மூலமும், வானொலி, படக்காட்சி மூலமும் அறிவு வளரும். (2) ஆசிரியர் சங்கங்கள் அமைத்து, பள்ளிகளின் முன்னேற்றம், கல்வி முன்னேற்றம் போன்ற பொது விஷயங்களைப் பற்றி விவாதிப்பதால் ஆசிரியரின் அறிவு வளரும். (3) கோடை விடுமுறைகளில் புத்துயிர்ப் பயிற்சி வகுப்புகள் (Refresher courses) நடத்துவதன் மூலம் அறிவு வளரும். இவ்வகுப்புகளில் புதியபோதனை முறைகளை அறியவும், உபகரணங்கள் தயாரிக்கவும் வாய்ப்பு ஏற்படும்,

# 7. கல்வி இலாகா சட்டதிட்டங்கள்

## 1. புதிய பாடசாலே ஆரம்பிக்க முறைகள் :

புதிய பாடசாலே ஆரம்பிக்க விரும்பும் நபர் (அ) ஸ்தாபனம் முதலில் கல்வி அதிகாரிகளேக் கலந்தாலோசிக்க வேண்டும். பின் அவர்கள் அனுமதிபெற்று, பாடசாலேயை ஆரம்பிக்கவேண்டும்.

அனுமதி பெறுவதில் சில நிபந்தனேகள் ; (அ) அனுமதி கோரப்படும் அந்த ஊரில் அங்கீகாரமான பாடசாலே யிருந்தால் அனுமதி கிடைக்காது. (ஆ) சுற்றுப்புறத்தில் போதுமான பாடசாலேகள் இருந்தால் புதிதாக கிராண்ட் பாடசாலேக்கு அனுமதி கிடைக்காது. (இ) புதிய பாடசாலே யின் அவசியத்தையும் போதிய பிள்ளேகள் சேருவார்களென்றும் நிரூபிக்க கீழ்க்கண்ட விவரங்கள் கொடுக்க வேண்டும். (1) அவ்வூரிலிருந்து இயற்கைத் தடங்கலில்லாத 1 மைல் சுற்றளவிலுள்ள ஜனத்தொகை. படிக்கும் வயதுள்ள மாணவ மாணவிகளின் எண்ணிக்கை (2) அப்பிள்ளேகள் தற்போது எங்கு படித்துவருகிறூர்கள் (பள்ளி, வகுப்பு முதலிய விவரங்களுடன்) (3) சுற்றுப்புறத்திலுள்ள பாடசாலேகளின் பெயர்கள், தூரம், போவதற்கு வசதிகள், இயற்கைத் தடங்கல் முதலியன (4) இந்த விவரங்களேக் காட்டக்கூடிய படம் ·(5) பொதுமக்கள் கையொப்பமுடன் கூடிய மனு.

அனுமதிபெற்று பாடசாலே ஆரம்பித்தவுடன் டெபுடி இன்ஸ்பெக்டருக்கு ஆரம்பத்தைப்பற்றிய அறிக்கை (Report) ஒன்று அனுப்பவேண்டும். பள்ளி ஆரம்பித்த 3 மாதங்களுக்குள், அங்கீகார மனுவைப் பிழைகளின்றி பூர்த்திசெய்து டெபுடி இன்ஸ்பெக்டர் மூலமாக மாவட்டக் கல்வி அதிகாரிக்கு அனுப்பவேண்டும்.

## 2. அங்கீகாரம் பெறுவதனுல் நன்மைகள் யாவை ?

(அ) சர்க்காரிடமிருந்து பல உதவிகளேப் பெறலாம். (ஆ) கல்வி இலாகா அதிகாரிகள் பார்வையிடவும் தணிக்கைசெய்யவும் வருகின்ற காரணத்தால் பாடசாலேயும்

நிர்வாகமும் ஒழுங்காக நடைபெறும். (இ) பள்ளியிலிருந்து கொடுக்கப்படும் சர்டிபிகேட்டுகளைக் கொண்டு வேறு அங்கீகாரமான பாடசாலைகளில் சுலபமாகச் சேரலாம். (ஈ) சர்க்கார் தேர்வுகளுக்கு மாணவர்களை அனுப்பலாம்.

3. அங்கீகார நிபந்தனைகள் யாவை ?

1. கல்வி இலாகாவின் முன் அனுமதியின்றி ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைக்கு அங்கீகாரம் கிடைக்காது. (2) எல்லா ஜாதியாரும் வரக்கூடிய பொது இடத்தில் பாடசாலை நடைபெருவிட்டால் அங்கீகாரம் கிடைக்காது. (3) உபபாடசாலை, வளர்ந்து வரும் பாடசாலை நீங்கலாக மற்ற பாடசாலைகளில் 5 வகுப்புகள் இல்லையென்றால் அங்கீகாரம் கிடைக்காது. (4) தற்காலீக அங்கீகாரம் பெற்ற பள்ளிகள் தவணை முடிய 3 மாதத்துக்குள் மறு அங்கீகாரத்துக்கு மனு செய்ய வேண்டும். (5) ஆசிரியர்கள் போதனுமுறை பயிற்சி சர்டிபிகேட் பெற்றவராகஇருக்கவேண்டும். (6) தனிப்பட்ட நிர்வாகத்தின் கீழ் வேலைசெய்யும் எல்லா ஆசிரியர்களுக்கும் ஊழியப்பதிவேடுகள் பூர்த்தி செய்துவைக்கப்பட வேண்டும். அதில் ஆசிரியர், நிர்வாகி, தணிக்கை அதிகாரி ஆகிய மூவரும் கையொப்பமிட வேண்டும். (7) நிர்வாகத்தார் அனுமதித்தாலன்றி எந்த ஆசிரியரும் 3 மாத நோட்டீஸோ 3 மாத சம்பளமோ கொடுக்காமல் விலகக் கூடாது. (8) ஒருநிரந்தர ஆசிரியரைக் கீழ்க்காணும் சந்தர்ப்பங்களில் வேலையைவிட்டு நீக்கலாம். (a) மூளைக்கோளாறு, கீழ்ப்படியாமை, ஒழுக்கந்தவறுதல், மனமறிந்து கடமையைச் செய்யாதிருத்தல், டைரக்டரால் சர்டிபிகேட் ரத்து செய்யப்பட்ட ஆசிரியர் இவர்களை நோட்டீஸ் இல்லாமலே வேலையைவிட்டு நீக்கலாம். (b) திறமையின்மை, உடல் குறைகள், பிள்ளைகள் குறைவினல் ஆசிரியரைக்குறைத்தல், போன்ற காரணங்களுக்காக, 3 மாத நோட்டீஸோ, 3 மாத சம்பளமோ கொடுத்து நீக்கலாம். இந்த விஷயங்களில் நிர்வாகம் நன்கு யோசனை செய்து முடிவு செய்யவேண்டும். 4 ஆண்டுகளுக்கு மேல் வேலை செய்த ஆசிரியரைத் திறமையின்மை காரணமாக நீக்குவதானல் டெபுடி இன்ஸ்பெக்டரிடமிருந்து அனுமதி பெற வேண்டும். (c) 3 மாதத்திற்குக் குறைவான காலத்துக்கு நியமிக்கப்படும் ஆசிரியர் விஷயத்தில் இருதரப்பிலும் நோட்டீஸ் தேவையில்லை. ஒருநிர்வாகத்தில் வேலைசெய்யும் ஆசிரியர் நிர்வாகத்தின் அனுமதி

யின்றி வேருெரு நிர்வாகத்துக்கு மனுச் செய்தால் வேலையிலிருந்து நீக்கப்படலாம். நிர்வாகத்தார் மனு அனுப்புவதை மறுக்கக்கூடாது. (9) மாநிலக்கல்வி இயக்குநர் ஆசிரியராக இருக்கத் தகுதியற்றவர் என்பவரையோ, சர்டிபிகேட் ரத்து செய்யப்பட்டவரையோ, சர்ட்டிபிகேட் சஸ்பெண்ட் செய்யப்பட்டவரை சஸ்பெண்டு காலம் முடியும் வரையோ, வேலைக்குச் சேர்த்துக்கொள்ளக் கூடாது. (10) ஒரு ஆசிரியருக்கு சராசரி 35 பிள்ளைகள் இருக்கவேண்டும். மாணவர்களின் சராசரி வருகை 35-க்கு மேலிருந்தால் டெபுடி இன்ஸ்பெக்டர் அனுமதிபெற்று 2 வகுப்புகளாகப் பிரித்துக் கொள்ளலாம். (11) பாடசாலைக் கட்டடம், காற்று, வெளிச்சம், வரக்கூடியதாகவும், தோட்டம், விளையாடுமிடம் இவற்றிற்குப் போதிய இடமும் இருக்க வேண்டும். (12) மேஜை, நாற்காலி மற்றும் போதிய தளவாட சாமான்கள் இருக்கவேண்டும். (13) பிராவிடெண்ட் பண்டு, அபராதம் நீங்கலாக ஆசிரியர் சம்பளத்தில் எந்தத் தொகையும் பிடிக்கக்கூடாது. அபராதத்துக்குத் தனி ரிஜிஸ்தர் வைக்கவேண்டும். ஒரு தடவையில் 1 ரூபாய்க்கு அதிகமாகவோ, ஒரு மாதத்தில் 3 ரூபாய்க்கு மேலோ அபராதம் விதிக்கக்கூடாது. (14) அரசாங்கத்தாரால் அங்கீகரிக்கப்படாத பாடப் புத்தகங்களை வைக்கக்கூடாது. (15) பள்ளிக்குத் தேவையான எல்லா ரிஜிஸ்தர்களும் நல்ல முறையில் எழுதப்பட்டு, தேவையான பொழுது தணிக்கையதிகாரிகள் முன் ஆஜர் செய்ய வேண்டும். (16) எல்லா பாடசாலைகளிலும், குழந்தைகளின் தாய்மொழி மூலமாக, கல்வி இலாகாவின் பாடத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு போதனை நடைபெற வேண்டும்.

**4. ஒரு பாடசாலையில் வைக்கப்படவேண்டிய நிரந்தர ரிகார்டுகள் யாவை?**

(1) சேர்க்கை நீக்கல் ரிஜிஸ்டர் (2) ஆஜர்ப்பதிவுப்பட்டி (3) மாணவரின் தனித்தனி ரிகார்டுஷீட் (4) தேக்க ஜாபிதா (5) மார்க்குப் புத்தகம் (6) ஸ்காலர்ஷிப் புத்தகம் (7) ஆஜர்ப் பதிவுப்பட்டி (8) சம்பள ரிஜிஸ்தர் (9) அபராத ரிஜிஸ்தர் (10) க்ஷேமநிதி சம்பந்தப்பட்ட கணக்குகள் (11) ஆசிரியர் விடுமுறைப் பட்டியல் (12) தணிக்கைரிஜிஸ்தர் (13) பார்வையாளர் குறிப்புப் புத்தகம் (14) தலைமையாசிரியர் மேற்பார்வைப் புத்தகம் (15) சென்ஸஸ் ரிஜிஸ்டர் (16) கட்டாயக் கல்வி அமுலிலுள்ள இடங்களில் வரத் தவறியவர்கள்

ஜாபிதா (17) ரிகார்டு ஷீட்டுகளின் ரிஜிஸ்தர் (18) பெற்ரேர் சங்கக் கூட்டக் குறிப்புப் புத்தகம் (19) தளவாட சாமான்கள் பட்டியல் (20) பாடசாலை வளர்ச்சிக் குறிப்புப் புத்தகம் (21) வரவு செலவுக் கணக்குப் புத்தகம்

5. கல்வி கிராண்டு தவிர இதர கிராண்டுகள் என்னென்ன பெறலாம்?

(1) இராணுவத்தினர், தாழ்த்தப்பட்டோர் குழந்தைகளுக்குத் தரப்படும் சம்பளச்சலுகைக்கு நஷ்டஈடு கிராண்ட் (2) பாடசாலைக் கட்டடம், உணவு விடுதிக் கட்டடம் கட்டுவதற்கும் விரிவாக்குவதற்கும் கிராண்டு பெறலாம் (3) பாடசாலைத் தோட்டம், விளையாடுமிடம் இவைகளுக்காக நிலம் வாங்க கிராண்ட் பெறலாம் (4) பள்ளிக்குத் தேவையான உபகரணங்கள், தளவாட சாமான்கள், விளையாட்டுப் பொருள்கள், நூல் நிலையப் புத்தகங்கள் இவற்றிற்காக உதவி பெறலாம் (5) அனுதை மாணுக்கர்க்குக் கொடுக்கும் சாப்பாட்டுச் செலவுக்கும் மதிய உணவுத் திட்டத்திற்கும் உதவி பெறலாம் (6) கிணறுகள் வெட்ட கிராண்டு பெறலாம்.

6. போதனுக் கிராண்டு குறைக்கப்படக் காரணங்கள் யாவை?

(1) பாடசாலை நிர்வாகம், ஒழுங்கு, போதனை, இடவசதி இதர சாதனங்கள் இவைகளில் ஏதாவது குற்றங்களிலிருந்தால் குறைக்கப்படும். (2) நிரந்தரப் படிப்பறிவு பெறுவதற்கு முன்னதாகவே பிள்ளைகள் பாடசாலையை விட்டு அகன்ருல் குறைக்கப்படும் (3) மாணவர்களைத் தேக்கி வைத்தால் குறைக்கப்படும் (4) பாடசாலை வேலைநாட்களில் குறைவு ஏற்பட்டால் குறைக்கப்படும் (5) பாடசாலை வேலை நேரத்தைக் குறைத்தால் குறைக்கப்படும் (6) 5 வயதுக்குக் குறைந்த பிள்ளைகளைப் பள்ளியில் சேர்த்தால் குறைக்கப்படும். (7) டெபுடி இன்ஸ்பெக்டரிடம் அனுமதி பெருமல் பிள்ளைகளைக் காலந்தவறிப் பள்ளியில் சேர்த்தால் குறைக்கப்படும். (8) அரசியல் சம்பந்தமான காரியங்களுக்காகப் பள்ளிக் கட்டடத்தை உபயோகித்தால் குறைக்கப்படும் (9) அங்கீகரிக்கப்படாத புத்தகங்களைப் பாடபுத்தகமாக வைத்தாலும், வைத்த புத்தகத்தை 2 ஆண்டுக்குள் டெபுடி இன்ஸ்பெக்டர் அனுமதியின்றி மாற்றினுலும் குறைக்கப்

படும் (10) இவை தவிர வேறு ஏதாவது மோசடி, ஒழுங்கீனம், தவருன தகவல்களைக்கொடுப்பது முதலிய காரணங்களுக்காக 10% வரை குறைக்கலாம். குறைகள் கடுமையானதாகக் காணப்பட்டால் அங்கீகாரத்தையே ரத்து செய்யலாம்.

# 8. ஆசிரியர் சங்கம்

*1.* பாடசாலைகளின் ஒத்துழைப்பு ;

பல பாடசாலைகள் ஒத்துழைப்பதால் அநேக நன்மைகள் உள்ளன. கல்வி விரைவில் பரவும். மாணவர், ஆசிரியர் ஒற்றுமை நிலவும், ஊராரும் பாடசாலையை நன்கு மதிப்பர். ஒரே ஊரிலுள்ள பாடசாலைகளும், ஒரு தாலுகாவிலோ அல்லது ஜில்லாவிலோ உள்ள பாடசாலைகளும் சேர்ந்து வேலை செய்யலாம்.

(i) பொதுவான பாடப்புத்தகங்களும் தேர்வுகளும் வைக்கலாம். ஓர் ஊரிலுள்ள பல பாடசாலைகளில் பல புத்தகங்களிருந்தால் பொதுமக்கள் ஒன்ருெடொன்றை ஒப்பிட்டு, விலை, கடினசுலபம், தன்மை முதலியவற்றைப் பற்றி அனுவசியப் பேச்சுகள் வரும். பாடப்புத்தகங்கள் பொதுவாக இருந்தால் இத்தகைய பேச்சுக்கு இடமில்லை. மேலும் புத்தகங்கள் ஒன்ருக இருப்பதால் பொதுத் தேர்வுகள் நடத்தலாம். கேள்வி குறிப்பது சுலபம். திட்டப்படி ஆசிரியர்கள் பாடம் முடிப்பார்கள். பல பள்ளிகளுக்குள்ளும் போட்டி ஏற்பட்டு மாணவர்கள் நன்கு படிப்பார்கள். பொதுவில் அதிகச் தேர்ச்சி ஏற்படும்,

(ii) ஆசிரியர் சங்கங்கள் ; பல பாடசாலைகளின் ஆசிரியர்கள் சங்கம் அமைத்து கல்வி சம்பந்தமான விஷயங்களைப் பற்றிப் பேசலாம். இச்சங்கத்தின் மூலமாக சொற்பொழிவுகள், கண்காட்சிகள், கல்விப் பிரயாணம், புத்துயிர்ப் பயிற்சி வகுப்புகள் போன்ற பயனுள்ள காரியங்கள் செய்து பாடசாலைகளின் ஒற்றுமையை வளர்க்கலாம்.

(iii) பந்தய விளையாட்டுகள் : பாடசாலைகளுக்குள் பொதுவிலே பந்தய விளையாட்டுகளும், விளையாட்டு விழாக்களும் நடத்தலாம். இந்த விழா சிறப்பாக அமைய எல்லா பாடசாலைகளும் ஒத்துழைக்கவேண்டும். தங்களுக்குள் ஒரு நிர்வாகக் குழுவைத் தேர்ந்தெடுத்து விழாவைச் சிறப்பாக

நடத்தலாம். வெற்றிபெற்ற மாணவர்க்குப் பரிசுகொடுக்க லாம். ஜில்லா பந்தய விளையாட்டுகளும் நடத்தலாம்.

(iv) கண்காட்சிகள் : கிராம மக்களுக்கு கல்வி யறிவை யும் மகிழ்ச்சியையும் உண்டுபண்ண, பல பாடசாலைகள் சேர்ந்து மாபெரும் கண்காட்சி அமைக்கலாம். பொதுவான ஒரு இடத்தில் பல பள்ளிகளின் சாமான்களை ஒழுங்கு படுத்தி அமைத்து, கிராம மக்களைப் பார்க்கச்சொல்லலாம்.

மேலே சொன்ன நான்கு முறைகளாலும் பல பாட சாலைகளிடையே ஒத்துழைப்பை வளர்க்கலாம்.

2, ஆசிரியர் சங்கம்

நன்மைகள் : (1) ஆசிரியர்களுக்குள் ஒற்றுமை ஏற் படும். (2) போதனு முறைகளில் தொடர்பு இருக்கவும், தொழில் திறமை வளரவும் பயன்படும். (3) கல்வி சம் பந்தமான விஷயங்களைப் பற்றி விவாதிக்கலாம் (4) ஆசிரி யர்களின் நன்மைகளுக்காகப் பாடுபடலாம். (5) கல்வி முன்னேற்றத்துக்குப் பாடுபடும்.

அமைக்கும் விதம் : ஒரு வட்டத்துக்கு (Range) ஒரு சங்கம் ஏற்படுத்தலாம். அந்த வட்டார டெபுடி இன்ஸ் பெக்டர் தலைவராவார். அந்த வட்டார ஆசிரியர்களனைவரும் அங்கத்தினர்களாகவேண்டும். அவர்கள் தங்களுக்குள் ளேயே ஒரு செயலாளரையும், பொருளாளரையும் தேர்ந் தெடுக்கவேண்டும். மாதமொருமுறை கூட்டம் கூடும், எல்லா ஆசிரியர்களும் வரவேண்டும். வராத ஆசிரியர் களின்மேல் நடவடிக்கை எடுக்கவேண்டும். ஒரு வருஷத் துக்கு வேண்டிய திட்டத்தை மாதவாரியாகப் பிரித்து அந்தந்தக் கூட்டத்தில் நடக்கவேண்டிய விஷயங்களை முன்பே திட்டம்போட்டுக்கொள்ளவேண்டும். கூட்டங்களின் நடவடிக்கைகளை ஒரு குறிப்பில் எழுதிக்கொள்ளவேண்டும். ஆண்டு இறுதியில் அந்த ஆண்டு நடவடிக்கைகளின் சுருக் கத்தை அறிக்கையாக மாவட்ட கல்வி அதிகாரிக்கு அனுப் பலாம். அரசியல் விஷயங்களைக் கூட்டங்களில் பேசக் கூடாது.

வேலைகள் : (1) கல்வி சம்பந்தமான விவாதங்கள், சொற்பொழிவுகள் நடைபெறும், (2) போதனு அனுபவ முள்ளவர்கள் மாதிரிப் பாடங்கள் கொடுக்கலாம்.

(3) இரட்டை வகுப்புப் போதனு வேலைத்திட்டம், கால அட்டவணை, தோட்டவேலை, தேக்கம், வியர்த்தம், பெற்ருேர் சங்கம் நிறுவுதல் போன்ற விஷயங்களைப் பற்றிப் பேசலாம். (4) வருஷாந்திரத் திட்டத்தில், சொற்பொழிவுகள், கண் காட்சிகள், போதனு உபகரணம் தயாரித்தல், கல்விப் பயணம், புத்துயிர்ப் பயிற்சி வகுப்புகள் முதலியன இடம் பெற வேண்டும். (5) கல்வி இலாகாவின் புதிய சட்ட திட்டங்களையும், திருத்தங்களையும் இன்ஸ்பெக்டர்கள் விளக்கிக் கூறலாம்.

சென்னை மாகாண முழுதுக்கும் பொதுச்சங்கம் தென்னிந்திய உபாத்திமைச் சங்கம். இதில் மாவட்ட உபாத்திமைச்சங்கங்களும் இதர வட்டார ஆசிரியர் சங்கங்களும் இணைக்கப்பட்டு வேலைசெய்கின்றன.

# 9. பெற்ருேர் ஒத்துழைப்பு

*1.* பெற்ருேரின் ஒத்துழைப்பு:

பள்ளியின் முன்னேற்றத்துக்கு பெற்ருேரின் கூட்டுறவு அவசியம். ஆகவே ஆசிரியர் பொது மக்களோடு நெருங்கிப் பழகி, பிள்ளைகள் கல்வியின் முழுப்பயனையும் அடையும்படிச் செய்யலாம். கல்வியறிவில்லாத பல பெற்ருேர்கள் மாலை விளையாட்டுக்கள், சாரண இயக்கம், உல்லாசப் பயணம் போன்ற புதிய நன்மைதரும் திட்டங்களுக்கு ஆதரவு அளிப்பதில்லை. பள்ளி நேரம்போக மீதிநேரங்களில் வீட்டு சம்பந்தமான வேலைகளை பிள்ளைகள் செய்ய வேண்டுமென்கிருர்கள். இவ்வாறு பல பெற்ருேர் பாடசாலையின் வேலைக்கு இடையூருக இருக்கிருர்கள். இக்குறைகளைப் போக்க ஆசிரியர்-பெற்ருேர் கூட்டுறவு அவசியம்.

(i) பிள்ளைகளின் வீடுகளுக்குச் செல்லுதல்: ஆசிரியர் பிள்ளைகளின் மேலிருக்கும் அன்பைக் காட்ட பிள்ளைகளின் வீடுகளுக்குச் செல்லலாம். அன்பு, மரியாதை, பாரபட்சமின்மை, கல்வியறிவு, நன்னடத்தையுள்ள ஆசிரியரை குழந்தைகள் நேசிப்பார்கள். பெற்ருேர்களிடம் புகழ்ந்து பேசுவார்கள். ஆசிரியர்-பெற்ருேர் உறவு ஏற்படுகிறது. பிள்ளைகள் வீடுகளில் எவ்வாறு நடந்து கொள்ளுகிருர்கள் என்பதை அறியலாம். உடலிலும் உள்ளத்திலும் உள்ள குறை

களையறிந்து போக்கலாம். பாடங்களிலுள்ள சந்தேகங்களைப் போக்கலாம். மாணவர்கள் கெட்டபழக்கங்களில் ஈடுபடாமல் தடுக்கலாம்.

(ii) பெற்ருேர் சங்கம்: பெற்ருேர் சங்கம் அமைத்து ஒத்துழைப்பைப் பெறலாம். பள்ளி முன்னேற்றத்துக்கும், பாடுபடலாம். கண்காட்சி, சொற்பொழிவுகள், விழாக்கள் நடத்தலாம். முதியோர் கல்வி, இரவுப்பள்ளிகள் நடத்தலாம். இம்முறைகளில் பெற்ருேர் ஒத்துழைப்பைப் பெறலாம்.

(iii) சமூகசேவை: ஆசிரியர் ஓர் சிறந்த சமூகத்தொண்டராக இருந்து பொது மக்களுக்கு நன்மைகள் செய்யலாம். முதியோர் கல்வி, நூல்நிலையம், கண்காட்சி ஏற்படுத்துதல் மூலம் தொண்டு செய்யலாம். தொத்துநோய்க் காலங்களில் சுகாதார அதிகாரிக்குத் தெரிவித்து தடுப்பு ஊசி போடச் செய்யலாம். ஆபத்துக்காலங்களில் முதலுதவி செய்யலாம்; கிராமத்தில் ஏற்படும் தகராறுகளைத் தீர்க்கலாம்.

(iv) பிரசாரம்: பிரசாரத்தின் மூலமாக, கல்வியின் அவசியத்தையும் நன்மைகளையும் விளக்கலாம். புள்ளி விவரங்கள் கொடுக்ககலாம். வியர்த்தம், தேக்கம் ஆகியவற்றுக்கான காரணங்களைக் களையலாம். பிரசாரத்தின்மூலம் நல்ல பலன் கிடைக்கும்.

(v) விழாக்கள் : பள்ளியிலே ஆண்டு விழா, விளையாட்டு விழா போன்ற விழாக்கள் நடத்த அனைவரையும் அழைக்க வேண்டும். அப்போது ஆசிரியர்-பெற்ருேர் தொடர்பு ஏற்படுகிறது.

(vi) பழைய மாணவர் சங்கம்: பழைய மாணவர் சங்கம் நிறுவி அதன் மூலம் பெற்ருேர் ஒத்துழைப்பைப் பெறுவது எளிது. இச்சங்கம் பாடசாலை வேலைக்கு மிகவும் உதவும். ஏற்கனவே பள்ளியில் படித்த பழைய மாணவர்களைக் கொண்டு அமைக்கப்படுவதால் விசுவாசத்துடன் வேலைசெய்து ஒத்துழைப்பார்கள்.

(vii) தேர்ச்சி அறிக்கைகள்: பிள்ளைகளின் தேர்ச்சி அறிக்கைகளை அவ்வவ்போது பெற்ருேருக்கு அனுப்பவேண்டும். அதனுல் பிள்ளைகளின் திறமையையும் நிலையையும்

பெற்றோர் அறியக்கூடும். இதில் பாடத்தேர்ச்சி, ஆஜர் நாட்கள், ஆரோக்கிய நிலை, நடத்தை முதலியன குறிப்பிடப் படவேண்டும். பிரதி கால் வருஷமும் ரிபோர்ட்டுகள் அனுப்பி னால் பெற்றோர்கள் பிள்ளைகளின் தேர்ச்சியையறிந்து அபி விருத்திக்குப் பாடுபடுவார்கள். ஆசிரியர்களுடன் நேரில் பேசி முன்னேற்றத்துக்கு ஆவன செய்வார்கள். இதனால் ஆசிரியர்—பெற்றோர் தொடர்பு அதிகரிக்கும்.

மேலே சொன்ன முறைகளில் ஒருஆசிரியர் பெற்றோரின் ஒத்துழைப்பைப் பெற்று பள்ளியின் முன்னேற்றத்துக்கும் மாணவர் முன்னேற்றத்துக்கும், கல்வி முன்னேற்றத்துக்கும் கிராம முன்னேற்றத்துக்கும் பாடுபடலாம்.

# 10. பாடசாலையில் சமூகத்தொண்டு

முன்னுரை:

தற்காலத்தில் கிராமங்களில் அறியாமையும் வறுமை யும் குடிகொண்டிருக்கின்றன. கிராமத்தாரிடம் ஒற்றுமை கிடையாது. சுகாதாரம் கிடையாது. ஆகவே கிராம மக்கள் மிகவும் சீர்கேடாக, பிற்போக்கான நிலையிலிருக்கிறார்கள். இதைப்போக்க ஆசிரியர் மாணவர்க்கு மட்டுமல்லாது பொதுமக்களுக்கும் கல்வியறிவு புகட்டவும் சீர்திருத்தத் திற்கு வழிகாட்டியாகவும் இருக்கவேண்டும். கிராமத்திலே கல்வி பரவுவதோடு, சுகாதாரம், பொருளாதாரம், தொழில் கள் முதலியனவும் விருத்தியடைய வேண்டும். ஒவ்வொரு பாடசாலையும் ஆசிரியரும் பொதுமக்களிடை கல்வி பரப்புவ தோடு சேவை செய்யவும் முற்பட்டால் நமது கிராமங்கள் விரைவில் முன்னேற்றமடையும்.

(i) வாசகசாலை: கல்வி பரவ வாசகசாலையும் நூல் நிலை யங்களும் முக்கிய சாதனங்களாகும். வாசகசாலையில் செய்தித்தாள்களை வாசிப்பதன் மூலம் உலக அறிவு பெற முடியும். நூல் நிலையத்தில் கிராமத்தாருக்குப் பயன்படக் கூடிய தமிழ்ப் புத்தகங்கள் இருக்கவேண்டும். நூல் நிலைய மும் வாசகசாலையும் பள்ளிக்கட்டடத்தில் இருந்தால் மாண வர்களும் பயனடைவார்கள், படிப்பில்லாதவர்களும் படித்த வர்களைப் படிக்கச் சொல்லிக்கேட்டுப் பயனடையலாம். இம் முறைகளால் கல்வியறிவும் பொது அறிவும் பரவுகின்றன.

(ii) முதியோர் கல்வி: படிப்பில்லாத முதியோர்களுக்குக் கல்வி கற்பிப்பது கடினம். இருந்தாலும் இரவு நேரங்களில் வகுப்புகள் நடத்தி எழுதப்படிக்கக் கற்பித்தால் போதுமானது. இலக்கிய அறிவு தேவையில்லை.

(iii) எந்திர சாதனக் கல்வி: படவிளக்கு, சினிமாக் காட்சி போன்ற யந்திர சாதனங்களைக் கொண்டு, பொது அறிவு, சுகாதாரம் போன்ற விஷயங்களைப் போதிக்கலாம். அரசாங்க அதிகாரிகளுக்கு எழுதி விழாக்காலங்களில் இவற்றை நடத்தலாம். இவை நன்கு பயனளிக்கும். இருந்தாலும் நம் நாட்டிலே இன்னும் இத்தகைய முறைகளில் முன்னேற்றமில்லை.

(iv) வானொலி: பல நாடுகளில் நிகழும் நிகழ்ச்சிகளை உடனுக்குடன் அறியலாம். இதன் மூலம் மாணவரும், பொதுமக்களும் பல துறைகளிலும் அறிவு பெறலாம்.

(v) பாடசாலைக் கொண்டாட்டங்கள்: சுகாதார வாரம், கல்வி வாரம், வனமகோற்சவ வாரம், முதியோர் கல்வி வாரம், U.N.O. நாள், கிராமச் சீரமைப்புவாரம், போன்ற கொண்டாட்டங்கள் நடத்தலாம். அதிகச் செலவில்லாமல் ஆடம்பரமில்லாமல் இவைகளைக் கொண்டாடலாம். இவ் விழாக்களில் சுகாதாரம், கல்வி சம்பந்தமான சொற்பொழிவுகளும், படக்காட்சிகளும், சிறுநாடகங்களும் நடத்தி கிராமத்தாரை மகிழச் செய்யலாம். சுகாதாரத்தைப் பற்றி போதிக்கலாம். இவை தவிர, விளையாட்டுகள், கண்காட்சிகள், ஆண்டுவிழா, நாடகங்கள் முதலியனவும் நடத்தலாம். கண்காட்சியில் கவர்ச்சியுடைய பொருள்கள் இருக்க வேண்டும். நாடகங்கள் கிராமீய முறையில், நல்ல கருத்துக்களைப் போதிக்கக் கூடிய வகையிலே இருக்க வேண்டும்.

(vi) தேசீய மாணவர் படை (N. C. C.) இது உயர் நிலைப் பள்ளி மாணவர்களுக்கு மட்டுமே ஒழுக்கம், கட்டுப்பாடு, வீரத்தன்மை முதலியவற்றுக்குப் பயிற்சியளிக்கிறது.

(vii) இதர இலாக்காக்கள்: விவசாய இலாகா, சுகாதார இலாகா, முதலிய இதர அரசாங்க இலாகா அதிகாரிகளுடன் ஆசிரியர் தொடர்புகொண்டு கிராமத்திற்கு சமூகத் தொண்டு புரியலாம், இவை தவிர மாணவர்க்குக் கைத்

தொழில் கட்டாயபாடமாக இருக்கிறபடியால் கைத்தொழில் இலாகா (Industries) ஒத்துழைப்பின் பேரில் மாணவர்க்கு மட்டுமல்லாது கிராம மக்களுக்கும், நூல் நூற்றல், துணி நெய்தல், தச்சு வேலே மற்றும் இதர சிறு வேலேகளில் ஒத்துழைக்க ஆவன செய்யலாம். தொழில் கல்விப் பயிற்சியை ஆசிரியர் கிராமப் பொது மக்களிடமிருந்தே பெற்றுக் கொள்ளலாம். அவர்களுக்கு ஓய்வு நேர ஊதியமாக ஒரு தொகையைக் கொடுத்து விடலாம்.

மேலே சொன்ன முறைகளில் ஆசிரியர் ஒரு சிறந்த சமூகத் தொண்டராகி, பாடசாலேயை ஒரு சமூக சேவா நிலேயமாக ஆக்கலாம்,

# 11. புதிய கல்வி முறைகள்

1. பழைய கல்வி முறைக்கும் புதிய கல்வி முறைக்கும் உள்ள வேறுபாடுகள் :

(i) பழைய கல்வி முறை புத்தகத்தை அடிப்படையாகக் கொண்டது. புதிய கல்வி முறை மாணவனே அடிப்படையாகக் கொண்டது. (ii) பழைய முறையில் மாணவன் மூளேயில் விஷயங்கள் திணிக்கப்பட்டன. புதிய முறையில் மாணவர்கள் தாங்களாகவே அறிந்துகொள்கிருர்கள். (iii) பிள்ளேகள் அரைகுறையாகக் கற்றுக்கொண்டு மனப்பாடம் செய்து பாராமல் ஒப்புவித்து, தேர்வுகளில் அதையே எழுதினர்கள். புத்தகங்களே மனப்பாடம் செய்யாமல் நேரடி அனுபவம் மூலம் அறிவு பெறுகிருர்கள். (iv) வாழ்க்கைக்கு சம்பந்தமில்லாமல் இருந்தது. வாழ்க்கையோடு ஒட்டி அமைக்கப்பட்டுள்ளது. (V) விரைவாகக் கற்க இடமில்லாமலிருந்தது. கல்வி விரைவில் நடைபெறுகிறது. (vi) உடல், உள்ளம், நடத்தை மூன்றும் வளர வழியில்லே. புதிய கல்விமுறையில் இவை மூன்றின் பூரண வளர்ச்சிக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

2. புதிய கல்வி முறைகள் :

i. ஐம்புலப் பயிற்சி: அரசியல் மேதை ரூஸோ, தன்னுடைய எமிலி என்ற நூலில் "பழைய கல்வி முறையைக் கண்டித்து, இயற்கை முறைகளேப் பின்பற்றவேண்டும்,

கண், மூக்கு, வாய், காது, உடல் ஆகிய ஐம்புலன்களுக்கும் பயிற்சி கொடுக்கவேண்டும்'' என்று கூறுகிறார். அதுவே கல்வியில் சீர்திருத்தம் ஏற்படக் காரணமாக இருந்தது.

ii. உற்று நோக்குதல் (நிதரிசன முறை) : சுவிட்சர் லாந்து நாட்டைச் சேர்ந்த "பெஸ்டலாஸி'' என்பவர் தமது பள்ளியில் படிக்கும் மாணவர்களை, இயற்கைப் பொருள் களை உற்று நோக்கச் செய்து கல்வி பயிற்றுவித்தார். அவரது கொள்கை, "பொருள்களை நேரில் பார்த்து அறிவு பெறவேண்டும்'' என்பதே. இவர் புத்தகங்களை ஒதுக்கி விட்டார்.

iii. ஐந்து படிகள் : ஹெர்பர்ட் என்னும் ஜெர்மானியர் மனத்தின் தன்மையையும், அது வேலை செய்யும் விதத் தையும் நன்கு ஆராய்ந்தார். பின் பாடம் போதிப்பதில் 5 நிலைகளை வகுத்தார். (1) முதலில் மனதைத் தயார் செய் தல். (2) பாட விஷயத்தை விவரித்தல். (3) பழைய தெரிந்த விஷயத்தோடு புதிய பாடத்தை இணைத்தல். (4) விஷயங் களை மனதில் பதியச் செய்தல். (5) புதிய அறிவை உப யோகித்தல். இந்த 5 நிலைகளையும் பாடக் குறிப்பு தயாரிக் கும் போது மனதில் கொள்ளவேண்டும்.

iv. கிண்டர் கார்டன் முறை: இதைக் கண்டவர் ஜெர் மனியைச் சேர்ந்த பிரிபெல். இவர் பாடசாலையைத் தோட் டத்துக்கும், ஆசிரியரைத் தோட்டக்காரருக்கும், பிள்ளைக ளைச் செடிகளுக்கும் ஒப்பிட்டார். ஆகவே இவர் பள்ளி "கிண் டர் கார்டன்'' அதாவது "குழந்தைகளின் தோட்டம்'' என அழைக்கப்பட்டது. இம் முறையில் புத்தகங்களில்லாமல் குழந்தைகளுக்கு விளையாட்டுகள் மூலம், கண், கைப்பயிற்சி, அட்டைகள், உருண்டைகள் உபயோகித்துக் கல்வி போதிக் கப்பட்டது.

v. மாண்டிசொரி முறை: இது இதாலி தேசத்தைச் சேர்ந்த மாண்டிசொரி அம்மையாரால் கண்டுபிடிக்கப்பட் டது. இதில் மூவகைப் பயிற்சிகள் கொடுக்கப்பட்டன. (1) உடலுறுதிக்கு உடற்பயிற்சி, (2) மனவளர்ச்சிக்குப் பொறிப் பயிற்சி (உபகரணங்கள் உதவியால்) (3) குழந் தைகள் சுயமுயற்சியால் அறிவு பெற பயிற்சி,

இதில் மாணவர்கள் தாங்களே கற்றுக்கொள்வார்கள். ஆசிரியர்கள் கூட இருந்து தேவையான பொழுது உதவி செய்வார்கள். வகுப்புகள் பிரித்து, போதிப்பது கிடையாது.

vi. டால்டன் முறை: அமரிக்காவைச் சேர்ந்த திருமதி. பார்க்ஹஸ்ட் எனும அம்மையாரால் டால்டன் எனும் ஊரில் ஆரம்பிக்கப்பட்ட முறை. இதன் முக்கிய அம்சங்கள்: (i) ஒரு ஆண்டுக்குரிய பாடத் திட்டத்தை மாதவாரியாகப் பிரித்து "ஒப்பந்தங்கள்" எனப் பெயரிடப்படும். ஒவ்வொரு மாணவனும் அந்தந்த மாதத்துக்குள் அந்த மாதத்திய ஒப்பந்தத்தை முடிக்கவேண்டும். முன்னாலேயே முடித்துவிட்டால் கூட புதிய பாடம் தரப்படமாட்டாது. (ii) கால அட்டவணை கிடையாது. ஆனால் ஒரு மாதத்திற்குள் ஒரு ஒப்பந்தம் முடிக்கப்படவேண்டும். (iii) ஆசிரியருக்கு வாய்மொழிப் போதனை கிடையாது. பிள்ளைகளின் உதவிக்கு, பல புத்தகங்களைப் படிக்கக் கொடுப்பார். சந்தேகம் எழும்போது தீர்த்து வைப்பார். (iv) ஒவ்வொரு பாடத்திற்கும் ஒரு தனி அறையும் அதில் அந்தப் பாட ஆசிரியரும் இருப்பார். பிள்ளைகள் எந்தப் பாட அறையில் வேண்டுமானாலும் எவ்வளவு நேரமானாலும் தங்கிப் படிக்கலாம்.

இதன் குறைகள்: (i) மந்த பிள்ளைகளுக்கேற்றதல்ல. புத்திசாலிப் பிள்ளைகளே பயன்பெறுவர். (ii) மொழிப் பாடங்கள் போதிக்க முடியாது. (iii) இம் முறைக்கேற்ற பாடப்புத்தகங்கள் இல்லை. (iv) வகுப்பு மாற்றல் தடைப் படும். (v) மேல் வகுப்புகளுக்கேற்றது. ஆரம்பப் பாடசாலை களுக்கேற்றதல்ல. (vi) பொதுவாக நம் நாட்டுக்கு இம் முறை ஏற்றதல்ல.

vii. செயல் திட்டமுறை; அமெரிக்கா தேசத்தைச் சேர்ந்த ஜான் டூயி எனபவரும் கில்பாட்ரிக் என்பவரும் சேர்ந்து இம்முறையைக் கண்டு பிடித்தனர். இதன் முக்கிய கருத்துகள்; (i) ஒரு பொருளை அல்லது ஒரு செயலை பிள்ளைகள் சுயமுயற்சியிலே இயற்கை சூழ்நிலையிலே ஆராய்தல் (ii) பிள்ளைகளின் திறமை, மனோசக்திக்கேற்ப வேலைகள் கொடுத்தல். (iii) அவ்வேலையை ஒட்டியே பாடங்களை போதித்தல். (iv) முயற்சி அல்லது வேலையை பிள்ளைகளாக விருப்பப்பட்டுத் தேர்ந்தெடுக்கவேண்டும். (v) எல்லா பிள்ளைகளும் ஒன்று சேர்ந்து அவ்வேலையைப் பற்றி

ஆராய்ந்து ஒற்றுமையோடு முடிக்கவேண்டும். ஒவ்வொரு முயற்சியிலும் ஆலோசித்தல், திட்டம் தீட்டுதல், வேலை செய்தல், மதிப்பிடுதல் என்ற நான்கு படிகள் உள்ளன.

(உ-ம்) நோட்டுதைத்தல் என்ற "முயற்சியை" வைத்து மற்றபாடங்களையும் போதிக்கலாம், நோட்டு தைக்கும் முறையைப் பற்றி வாய்மொழியாகப் பேசுவதும் அவ்வப் போது குறிப்புகள் எழுதுவதும் தாய்மொழிப் போதனை யாகும். அதன் விலை, காகிதத்தின் அளவு இதரவிவரங் கள் கணிதம் ஆகும். உலகில் காகிதம் முதன் முதலில் எங்கு தோன்றியது? கண்டு பிடித்தவர் யார்? காகிதம் எவ்வாறு தயாரிக்கப்படுகிறது? உலகிலே எந்தெந்த நாடு களில் காகிதம் செய்யப்படுகின்றன? இது சமூக அறி வாகும். இதுபோலவே எல்லா பாடங்களையும் இம்முறை மூலம் போதிக்கலாம்.

நன்மைகள்: (1) பிள்ளைகள் வாழ்க்கையை ஒட்டிய முயற்சிகளைத் தேர்ந்தெடுத்து சொந்த அறிவால் செய்து முடிக்கின்ற காரணத்தால் அறிவு, பழக்கம், நேரடி அனுபவம் ஏற்படுகின்றன. (2) கூட்டுறவு, ஒற்றுமை அதிகரிக்கிறது. (3) உடல், உள்ளம், நடத்தை இம்மூன்றும் ஒருங்கே வளர வழியிருக்கிறது.

viii வார்தா கல்வித்திட்டம்: ஆங்கிலக் கல்விமுறை இந்திய மக்களுக்கு நன்மை தருவதாக இல்லை. கேடுகள் விளைவிப்பதாக இருப்பதை யறிந்த மகாத்மா காந்தியடி கள் ஜாகிர் உசேன் என்பவரைத் தலைவராகக்கொண்ட குழு ஒன்றை ஏற்படுத்தினர். அக்குழு கொடுத்த அறிக்கையை யொட்டி, காந்தியடிகள் ஒருபுதிய கல்வித் திட்டத்தை வெளி யிட்டார். அதில் தனிப்பட்டவரின் நலன், சமூகநலன், நாட்டு நலன் மூன்றுக்கும் முக்கிய இடமளிக்கப்பட்டுள் ளது. இம்முறை முதன் முதலில் மத்தியப் பிரதேசத்தில் உள்ள வார்தா என்னும் ஊரில் ஆரம்பிக்கப்பட்டதால், வார்தா திட்டம் எனப் பெயர் பெற்றது. இதன் அம் சங்கள்; (i) நூல் நூற்றல், விவசாயம், நெசவுபோன்ற ஏதாவதொருகைத்தொழிலை அடிப்படையாகக் கொண்டு பாடம் போதிக்கப்படும். (ii) அக் கைத்தொழிலிலிருந்து கிடைக்கக்கூடிய வருவாயைக் கொண்டே ஆசிரியர் சம்பளம், பள்ளிக்காகும் செலவு இவைகளைப் பூர்த்திசெய்துகொள்ள

வேண்டும். இது சுயதேவைப் பூர்த்தி எனப்படும். (iii) 7–14 வயதுவரை எல்லோருக்கும் இலவசக்கட்டாயக்கல்வி இருக்கவேண்டும். (iv) இதில் ஆங்கிலத்துக்கு இடமில்லை. தாய்மொழி முதலாகவும் (தேசீயமொழி) இந்தி இரண்டாவதாகவும் கற்பிக்கப்படும். (v) பிள்ளைகள் அஹிம்சா முறையைப் பின்பற்றி உடல், உள்ளம், ஆன்மா மூன்றும் ஒருங்கே வளர்ந்து சிறந்த குடிமக்களாக ஆக வேண்டும் (vi) இத்திட்டம் செய்து கற்றல் முறையை வற்புறுத்துகிறது.

நன்மைகள் : (1) ஏழைஎளியவரும் கல்வி பயிலலாம். (2) குறைந்த காலத்தில் கல்வி விரைவில் பரவும் (3) சர்க்காருக்கு செலவில்லை (4) பள்ளிக்காகும் செலவையும் சம்பாதிக்கலாம், (5) உள்ளத்துக்கு மட்டுமல்லாது உடலுக்கும் வேலையிருப்பதால் உடல் வலுவேற்படும். (6) ஜாதி மதபேதம் ஒழிய சிறந்த முறை.

குறைகள் ; (1) பாடசாலைக்கு வேண்டிய செலவு முழுதும் ஈடு செய்ய முடியாது. (2) பிள்ளைகளுக்கு 7 வயதில்தான் பயிற்சி ஆரம்பமாகிறது· (3) விஞ்ஞான அறிவுக்கும் பிறநாடுகளுடன் தொடர்பு ஏற்படவும் வழியில்லை. (4) செய்யுள், கணிதம், விஞ்ஞானம், போன்ற பாடங்களில் உயரிய பகுதிகளை இம்முறை மூலம் கற்பிக்கமுடியாது.

இவ்வார்தா கல்வித் திட்டமே சிற்சில மாறுதல்களுடன் ஆதாரக் கல்வித்திட்டம் என்ற பெயருடன் வெளிவந்திருக்கிறது. ஏழைகளுக்கு ஆதாரமான விஷயங்களைக் கற்பிப்பதால் ஆதாரக்கல்வி எனப் பெயர்பெற்றது. கைத்தொழில் மூலமாகவும், உடலுழைப்பின் மூலமாகவும் மக்கள் வாழ்க்கைக்குத் தேவையான அறிவைப் பெறுவதே இதன் நோக்கமாகும். இதற்கு "வாழ்க்கைக்கல்வி" என்ற பெயரும் உண்டு. நமது நாட்டுக்கு ஏற்ற கல்வி முறை இதுவே என அறிந்து இப்போது எல்லா பள்ளிகளையும். பயிற்சிப் பள்ளிகளையும் ஆதாரக் கல்வி நிலையங்களாக மாற்றுகிறார்கள். இதற்கெனத் தனிப்பாடத்திட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளன.

# 12. பலவகைப் பள்ளிகள்

1. குழந்தைப் பள்ளி: (3-6 வயது)

குழந்தைகள் 6 வயதிலே பள்ளிக்கு வந்தாலும் 3 வயதிலிருந்தே புலன்களை உபயோகிக்கக் கற்றுக்கொள்கிறார்கள். பிறரைப் பார்த்துச் செய்தல், விளையாடுதல், போட்டியிடுதல், புதிய விஷயங்களை அறிய ஆசை போன்ற இயற்கையிலேயே அமைந்த பண்புகளைச் சரியான வழியில் பயன்படுத்தி நல்ல பழக்கங்கள் அமையுமாறு செய்யவேண்டும். பிரிபெல், மாண்டிசொரி போன்றோர் இத்தகைய பள்ளிகளை நடத்தினார்கள். இப் பள்ளிகளில் பாட, கால அட்டவணை கிடையாது. சுதந்திரம் உண்டு. தூக்கமும் ஓய்வும் அதிகம். வாழ்க்கையோடு ஒட்டிய செயல்களை குழந்தைகள் அறிவார்கள். இத்தகைய பள்ளிகள் நமது நாட்டில் சென்னை, திருச்சி, ஈரோடு போன்ற பெரிய நகரங்களில் உள்ளன.

2. பாலர் பாடசாலை (5-7 வயது)

மேலே சொன்ன குழந்தைகள் பள்ளிக்கும் பாலர் பாடசாலைக்கும் அதிக வேறுபாடுகள் இல்லை. இப்பள்ளிகளில் பாடங்கள் சற்றுக் கடினமாக இருக்கும். கிண்டர் கார்டன் முறையைப் பின்பற்றி, குழந்தைகளின் உடல், உள்ள வளர்ச்சிகளுக்கேற்ப, பாடங்கள் போதிக்கப்படும். இதற்குள்ள பாடத் திட்டத்தில், கதைகள், பாட்டு, விளையாட்டு, செடி வளர்த்தல், பிராணிகள் வளர்த்தல் முதலியவை உண்டு. இத்தகைய பள்ளிகள் நமது நாட்டில் மிகக் குறைவே உள்ளன.

3. தொழிற் பாடசாலைகள் (Technical Schools)

தொழில் கல்வியின் நன்மைகளையும் அவசியத்தையும் உணர்ந்து தற்போது அநேக பள்ளிகள் தொழிற் பயிற்சிக்காகத் தனியே நிறுவப்பட்டுள்ளன. மாணவர்களுக்கு ஒரு தொழிலைப்பற்றிய முழு அறிவும் பழக்கமும் ஏற்படுகிறது. (இப்போது சிற்சில உயர்நிலைப் பள்ளிகளிலேயே, இஞ்சினியரிங், விவசாயம், ஆசிரியர், போன்ற வேலைகளுக்கான தொழிற்பயிற்சி கொடுக்கப்படுகிறது)

4. கைத்தொழில் கல்விப்பாடசாலைகள்: (Industrial Schools)

நெசவு, மின்சாரம், அச்சுவேலை, இரும்புவேலை, தோல் வேலை, தச்சுவேலை போன்ற கைத்தொழில் (உடலுழைப்பு) களில் பயிற்சி கொடுக்கும் பள்ளிகள். இப்பள்ளிகளில் 2 அல்லது 3 ஆண்டுகள் பயிற்சிபெற்று வெளியேறுபவர் கள் அத்தொழிலைக் கொண்டு வாழ்க்கை நடத்தலாம்.

நம்நாட்டில் இவை தவிர, விவசாயம், மருத்துவம் போன்ற மேல் படிப்புக்காகக் கல்லூரிகளும், டைப்ரைட்டிங், சுருக்கெழுத்து, வர்த்தகம் (commerce) படிப்பதற்கு கமர் ஷியல் பள்ளிகளும், ஆண்-பெண் சேர்ந்து படிக்க, கூட்டுப் பாடசாலைகளும் உள்ளன.

# 13. சென்னை கல்வி இலாகா (கட்டாய) ஆரம்பக்கல்வி விதிகளைக் கூறுக

1. பாடசாலை நாள்:

குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களிலே இடைவேளை நீங்க லாக 5 மணி நேரம் போதனை கொடுப்பது பாடசாலை நாள் எனப்படும். ஒரு நாளைக்கு $2\frac{1}{2}$ மணிவீதம் 2 நாள் சேர்ந்தது ஒரு நாளாக கணக்கிடப்படும். 5 மணிக்குக் குறைவாக வேலை செய்யும் பள்ளிகளை, மாவட்டக் கல்வி அதிகாரி தகுந்த காரணங்களுக்காக விலக்களித்து ஒரு நாளாகக் கணக்கிடலாம்.

மாற்று முறை (shift system) அமுலிலுள்ள பள்ளி களில் காலையிலோ அல்லது மாலையிலோ $3\frac{1}{2}$ மணி நேரம் தொடர்ந்து நடைபெற்றால் அதை ஒரு நாளாகக் கணக்கிட லாம். (ஒரு பீரியடு 40 நிமிடங்கள் வீதம் 5 பீரியடுகளும் 10 நிமிடம் இடைவேளையும்) இத்தகைய பள்ளிகள் வாரத் துக்கு 6 நாள் வேலை செய்யும். வகுப்புகள் காலையில் 3 நாட்களும் மாலையில் 3 நாட்களும் மாறி நடைபெறும்.

இரவுப்பள்ளிகள் $2\frac{1}{2}$ மணி வேலை செய்தால் 1 நாளாகக் கணக்கிடலாம். எல்லா பள்ளிகளும் (உணவு விடுதியுள்ள

பள்ளிகள், அனுதைகளின் பள்ளிகள் தவிர) ஆண்டுக்கு 220 நாள் வேலே செய்ய வேண்டும். (i) பள்ளி இருக்கக் கூடிய கிராமத்திலே தொற்றுநோய் பரவி யிருந்தால் மாவட்டக் கல்வி அதிகாரி 3 மாதங்கள் வரை பள்ளியை மூடஅனுமதிக் கலாம். (ii) இதர காரணங்களுக்காக பள்ளியின் வேலே நாட்கள் குறைந்தால் 1 மாதம் வரை மாவட்டக் கல்வி அதி காரியும், 2 மாதங்கள் வரை பிராந்தியக் கல்வி அதிகாரியும், அதற்குமேல் போனல் மாநிலக் கல்வி இயக்குநரும் விலக்கு அளிக்கலாம்.

முதியோர்ப் பள்ளிகள் தினசரி $1\frac{1}{2}$ மணி வீதம் 200 நாட்கள் வேலேசெய்யவேண்டும்.

2. பாடசாலே இடம்:

ஒரு மாணவனுக்கு $9\frac{1}{2}$ ச. அடி வீதம் பள்ளி இடம் இருக்கவேண்டும். மேலும் அவனுக்குத் தேவையான படங் களும் சிறு உபகரணங்களும் இருக்கவேண்டும்.

3. பள்ளி வயது:

பள்ளி வயது என்பது 6—12 வரை. தாழ்த்தப்பட்டவர் களுக்கும் முஸ்லீம்களுக்கும் 6—14 வரை.

4, பாடங்கள்:

(i) கட்டாயப் பாடங்கள்: தாய்மொழி, ஆரம்ப கணிதம் இயற்கைப்பாடமும் தோட்டவேலேயும், சமூக அறிவு, உடற்பயிற்சி, கைத்தொழில், சங்கீதம், (ii) விருப்பப் பாடங்கள்: முதலுதவி, சித்திரம் வரைதல், இரண்டாவது மொழி, மத போதனே அல்லது நீதி போதனே.

5. கட்டாயக் கல்விச் சட்டம்:

(i) கட்டாயக் கல்விச் சட்டம் அமுலாக்கப்பட்ட இடங் களில் பள்ளி வயதையடைந்த பிள்ளேகளே பள்ளிக்கு அனுப் பும்பொறுப்பு பெற்ருேரைச் சாரும்.

(ii) ஒரு பள்ளியிலே படிக்கும் மாணவன் இடையிலே வேருெரு ஊரில் வேருெரு பள்ளியில் சேரும் நிலே ஏற்பட் டால் முந்திய பள்ளியில் அவன் வருகை நாட்கள் கணக்கில் சேர்த்துக் கொள்ளப்படும்.

(iii) பள்ளியில் சேருவதற்கான விண்ணப்ப மனுவை சரியாகப் பூர்த்திசெய்து பெற்ருேர் கையொப்பத்துடன் தான் மாணவரைப் பள்ளியில் சேர்க்கவேண்டும். மனுக்கள பத்திரமாக வைக்கப்படவேண்டும்.

(iv) புதிதாக ஒரு பள்ளியில் சேரக்கூடிய மாணவனைத் தலைமையாசிரியர் சோதித்து எந்த வகுப்புக்குத் தகுதியாயிருக்கிருனே அந்த வகுப்பில் சேர்த்துக்கொள்ளலாம். வேருெரு பள்ளியில் படித்துவிட்டுவரும் மாணவனை, அவனது ரெகார்டு ஷீட் அல்லது டிரான்ஸ்பர் சர்ட்டிபிகேட்டில் குறிப்பிட்டுள்ளபடி வகுப்புகளில் சேர்த்துக்கொள்ளலாம். அப்படி ரெகார்டு ஷீட்டில் குறிப்பிட்டுள்ள வகுப்புக்கு மேல் வகுப்பிலோ, அல்லது கீழ் வகுப்பிலோ சேர்த்தால், அவனைச் சோதித்த அத்தாட்சியுடன் டெபுடி இன்ஸ்பெக்டருக்கு உடனடியாகத் தெரிவிக்கவேண்டும்,

(v) எல்லா மாணவர்களுக்கும் ரெக்கார்டு ஷீட்டுகளை சரிவர, அவ்வப்போது பூர்த்தி செய்து வைக்கப்பட வேண்டும். பள்ளியைவிட்டு விலகும் மாணவனுக்கு அவனது ரெக்கார்டு ஷீட் (நகல் பள்ளியில் தனி ரிஜிஸ்டரில் வைக்கப் பட்டு) கொடுக்கப்பட வேண்டும்.

(vi) ஒவ்வொரு வட்டத்திலும் கட்டாயக் கல்விக் கமிட்டி நிறுவப்படவேண்டும். டெபுடி இன்ஸ்பெக்டர், எக்ஸ்-அபிசியோ (Ex-Officio) தலைவராக இருப்பார். எல்லா பள்ளித் தலைமையாசிரியர்களும், கட்டாயக் கல்விச் சட்டத்தை அமுலாக்க நியமிக்கப்பட்டுள்ள சூபர்வைசர்களும் குழு உறுப்பினராவர். சூபர்வைசர்களில் ஸீனியராக உள்ளவர் செயலாளராக இருப்பார். கிராமங்களில், கிராம முனிசீப்பும் உறுப்பினராவார். மாதம் ஒருமுறை கூட்டம் நடைபெறவேண்டும். தலைமையாசிரியரோ, அல்லது (டெபுடி இன்ஸ்பெக்டரிடம் முன் அனுமதி பெற்று) அவரால் அனுப்பப்பட்ட பிரதிநிதியோ கண்டிப்பாய் கூட்டங்களுக்கு வரவேண்டும். மொத்த உறுப்பினர்களில் $\frac{1}{3}$ பங்கு ஆஜராகாவிட்டால் கூட்டம் தள்ளி வைக்கப்படவேண்டும்.

(vii) கமிட்டியின் வேலைகள்: (1) பள்ளி வயதையடைந்து, பள்ளிக்கு வராதவர்களின் ஜாபிதா தயாரித்தல். (2) அந்த ஜாபிதாவை நேரில் சென்று சோதித்து சரி பார்த்தல். (3) சொற்பொழிவு மூலம் பெற்ருேர்களிடம் எல்லாப் பிள்ளைகளையும் பள்ளிக்கு அனுப்புமாறு கூறுதல், (4) கட்டாயக்

கல்வி சம்பந்தமாக கல்வி இலாகா வெளியிடும் சட்டங்களைப் பற்றி அறிதல். (5) பள்ளிக்கு வராத ஒவ்வொரு பையனின் வீட்டுக்கும் சென்று காரணம் ஆராய்தல். (6) இவை தவிர அவ்வப்போது மாநிலக் கல்வி இயக்குநர் போடக்கூடிய உத்திரவுகளை ஏற்று நடத்துதல்.

(viii) எல்லா தலைமையாசிரியர்களும் அவரவர் பள்ளி இருக்கக்கூடிய கிராமங்களில் வரத் தவறியவர்களின் ஜாபிதாவை மாதமொருமுறை கட்டாயக் கல்விக் கமிட்டிக்குக் கொடுக்கவேண்டும். கடைசியாக, இறுதி வரை வராதவர்களின் பட்டியல் (Final defaulter's list) தயாரித்து அனுப்பப் படவேண்டும். அதன் நகல் ரிஜிஸ்டர் பள்ளியில் இருக்க வேண்டும். மேலே கண்ட விதிகளின்படி தலைமையாசிரியர் நடக்காவிட்டாலோ, கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாவிட்டாலோ, அவர் வேலை செய்யும் பள்ளியின் அங்கீகாரம் ரத்து செய்யப்படலாம், அல்லது உதவித்தொகை நிறுத்தப் படலாம் அல்லது குறைக்கப்படலாம்.

(ix) தகுந்த காரணமிருந்தால் ஒரு சிறுவனுக்கு, விலக்கு அளிக்க கல்வி இலாகா டைரக்டருக்கு அதிகாரம் உண்டு. ஒரு காலாண்டில் சேர்ந்தாற்போல 15 நாட்களுக்கு ஒரு பையன் பள்ளிக்கு வரவில்லையென்றால் அந்த பையனின் பெற்றோர்மீது நடவடிக்கை எடுக்கலாம். (தகுந்த காரண மிருந்தால் மாவட்டக் கல்வி அதிகாரி விலக்கு அளிக்கலாம்) அந்த பெற்றோருக்கு கிராம முன்சீப் மூலமாக நோட்டீஸ் கொடுத்து, கமிட்டிமுன் ஆஜராகுமாறு தலைவர் செய்ய வேண்டும். அப்பெற்றோர், குறித்த தேதியில் வராமலிருந்தாலோ, தகுந்த காரணங்கள் தெரிவிக்காமலிருந்தாலோ, மாவட்டக் கல்வி அதிகாரிக்கு தெரிவிக்கவேண்டும். அவர் ரெக்கார்டுகளைப் பார்த்து, தீர விசாரித்து குற்றமிருந்தால் சட்டப்படி அபராதம் விதிப்பார். அவ்வாறு விதிக்கும் அபராதம் பற்றிய விபரம், தலைமையாசிரியர், டெபுடி இன்ஸ்பெக்டர், கிராமமுன்சீப் முதலியவர்களுக்குத் தெரிவிக்கப் படவேண்டும். ஒரு காலாண்டில் செய்த குற்றத்திற்கு மறு காலாண்டிற்குள் தண்டனை கொடுக்கவேண்டும். அதே போல் ஒரு புகார் வந்த 3 மாதங்களுக்குள் விசாரித்து தண்டனை கொடுக்கப்படவேண்டும். இல்லையென்றால் வழக்கு தள்ளப்படும். இவ்வாறு சட்டங்களை அமுலாக்கும்போதோ, நோட்டீசுகள் கொடுக்கும்போதோ, அபராதம் விதிக்கும்

போதோ ஏதேனும் தகராறு, இடையூறுகள் வந்தால், கல்வி இலாகா டைரக்டருக்கு உடனடியாகத் தெரிவிக்கப்பட வேண்டும்.

அபராத அளவு:

முதல் முறை குற்றம் செய்தால் எச்சரித்து விட்டுவிடல்.

| | | | | |
|---|---|---|---|---|
| 2ம் முறை ,, | குறைந்த பட்சம் | 0—75 nP | அதிக பட்சம் | 0—95 nP |
| 3ம் முறை ,, | — | 1—50 | — | 1—90 |
| 4ம் முறை ,, | — | 2—25 | — | 2—80 |
| 5ம் முறை ,, | — | 3—00 | — | 3—75 |
| 6ம் அதற்குமேல் ஒவ்வொரு முறைக்கும் | | 6—00 | — | 7—50 |

# பதிவேடுகள்.

## I. மாணுக்கர் சேர்க்கை - நீக்கல் பட்டி; (Admission Register)

1. தொடர் எண். 2. பிள்ளையின் பெயர். 3. தகப்பனுர் பெயர். 4. ஆதரிப்பவர் பெயர். 5. முகவரி 6. தகப்பனுர்/ஆதரிப்பவர் தொழில் 7. சேர்க்கப்பட்ட தேதி. 8. பிறந்த தேதி. 9. வைசூரித் தடுப்பு வார்த்ததா, குத்தியதா? 10. மதம். சாதி. 11. சேர்க்கப்பட்ட வகுப்பு. 12. பிள்ளையின் ரிகார்டு ஷீட்டுக்கு மனு அனுப்பிய தேதி. 13. பிள்ளை விலகிய வகுப்பு, தேதி, காரணம். 14. எந்தப் பாடசாலைக்குச் சென்றதோ, அதன் பெயர். 15. ரெகார்டு ஷீட் கொடுத்த தேதி. 16. சர்டிபிகேட் எண். 17. மீண்டும் சேர்க்கப்பட்டால் பழைய சேர்க்கை எண், 18. குறிப்பு.

## II. மாணுக்கர் ஆஜர்ப் பதிவுப் பட்டி:

தலைப்பில்: பள்ளியின் பெயர், மாதம், ஆண்டு, வகுப்பு, பிரிவு முதலியன 1. சேர்க்கை எண். 2. தொடர் எண். 3. பெயர். 4. நாட்கள் — 31. 5. மாணவனின் மொத்த வருகை. கீழே: மாத ஆரம்பத்தில் இருந்தவர்கள், இந்த மாதம் சேர்ந்தவர்கள், விலகியவர்கள், மீதி மாத இறுதியில் உள்ளவர்கள், பள்ளி வேலை நாட்கள், சராசரி முதலியன.

III ஆசிரியர் ஆஜர்ப்பதிவுப்பட்டி :

தலைப்பில் மாதம், ஆண்டு முதலியன. தொடர் எண், ஆசிரியர் பெயர், பதவி (Designation), நாள் (காலை, மாலை) மொத்த வேலை நாள், வந்த நாள் முதலியன.

IV. ஆசிரியர் சம்பளப்பட்டி :

தலைப்பில் மாதம், ஆண்டு முதலியன. பெயர், பதவி, கொடுக்கப்படவேண்டிய சம்பளம், பஞ்சப்படி, மொத்தம், பிடித்தம் T. P. F. மீதி, கொடுத்ததேதி, கையொப்பம் (தேதியுடன்).

V, ஸ்காலர்ஷிப் ரிஜிஸ்தர் :

1. எண். 2. மாணவன் பெயர். 3. மொத்தம் அல்லது மாதந்தோறும் கொடுக்கும் அளவு. 4. எவ்வளவு காலம். 5. காரணம். 6. சாங்ஷன் செய்த உத்தரவும் தேதியும்.

VI. தலைமையாசிரியர் மேற்பார்வைப் புத்தகம் :

1. நாள், நேரம். 2. ஆசிரியர் பெயர். 3. பாடம் (subject) 4. பகுதி (Lesson) 5. குறிப்பு (Remarks) 6. கையொப்பம்.

VII. ரிகார்டு ஷீட், ரிகார்டு ஷீட் ரிஜிஸ்தர்.

தலைப்பில், மாணவன் பெயர், பிறந்த தேதி, மதம், தகப்பனுர் பெயர் முதலியன. (1) பள்ளியின் பெயர் (2) சேர்ந்த தேதி (3) (ஒவ்வொரு காலாண்டுக்கும்) வகுப்பு, மொத்த நாட்கள், வந்த நாட்கள் (4) விட்ட தேதி (5) தேர்ச்சி (6) நடத்தை (7) குறிப்பு (8) தலைமையாசிரியர் கையொப்பம்.

viii. க்ஷேமநிதிப்பட்டியல் : (T.P.F. Register)

பள்ளியின் பெயர், ஆண்டு, மாதம் முதலியன. (1) பாஸ்புத்தகம் எண் (2) ஆசிரியர்பெயர் (3) சம்பளம் (4) ஆசிரியர் கட்டியது (5) நிர்வாகம் கட்டியது (6) கடனுகப் பெற்றதில் திரும்பச் செலுத்தும் தொகை (7) மொத்தம் (8) குறிப்பு

IX. சென்ஸஸ் ரிஜிஸ்தர் : ஊர் பெயர்

(1) கதவு எண் (2) குடும்ப எண் (3) குடும்பத்தலைவர் (4) பள்ளி வயதுள்ள பிள்ளைகள் ஆண் (முகம் 6–14 பிறர் 6-12) பெண் (முகம் 5-12 பிறர் 5-10) (5) படிக்கும் பள்ளியின் பெயர் (6) வகுப்பு, பள்ளிவருடம் (7) பிள்ளை வேலை செய்து வந்தால் விவரமும், முன்பு படித்த விபரமும்.

X வரவு செலவுப் புத்தகம் : பள்ளியின் பெயர், மாதம்.

வரவு : மாணவரிடமிருந்து சம்பளம்வகையரு, பள்ளிக்கு ஈடுகாட்டப்பட்டுள்ள சொத்திலிருந்து வருமானம், நன்கொடை, சர்க்காரிடமிருந்து வரும் உதவித்தொகைகள், இதர வருமானங்கள்.

செலவு : ஆசிரியர் சம்பளம், கட்டடம் பழுதுபார்த்தல், வாடகை, வரி, ஸ்காலர்ஷிப், பரிசுகள், புதிய கட்டடம், தளவாட சாமான்கள், உபகரணங்கள், நூல் நிலையம், விளையாட்டுக்கருவிகள், இதரசெலவுகள். நிர்வாகி, தலைமையாசிரியர் கையொப்பம்.

XI தேக்க ஜாபிதா :

ஒவ்வொரு வகுப்பிலும் இருக்க வேண்டும். ஒவ்வொரு வகுப்பிலும் ஒருவருடமும் அதற்குக்குறைவாகவும், இரண்டு வருடங்களுக்கு மேலாகவும், வாசிக்கும் பிள்ளைகளின் விவரங்களை அறியலாம். (1) தொடர் எண். (2) சேர்க்கை எண். (3) மாணவன் பெயர். (4) பிறந்த தேதி (5) முதல் வகுப்பில் சேர்ந்த தேதி, (6) 2-ம் வகுப்பில்சேர்ந்த அல்லது மாற்றப்பட்ட தேதி. (7) அதுபோலவே 3,4,5 வகுப்புகளுக்கும் சேர்ந்த, மாற்றப்பட்ட தேதி. (8) குறிப்பு. (9) தலைமையாசிரியர் கையொப்பம்.

# புதிய பாடத் திட்டம்

## முதல் வகுப்பு

1. தமிழ்: (i) வீடு, பள்ளி, சூழ்நிலையிலுள்ள பொருள்கள், விழாக்கள் போன்றவற்றைப்பற்றிப் பிழையின்றிப் பேசுவது. (ii) இரு கோடுகளுக்கிடையே எழுதிப் பழகியும், 300 சொற்களைப் படிக்கவும் கற்றுக்கொள்ள வேண்டும். (iii) செய்யுளிலே 100 வரிகள் தெளிவாக ஒப்புவிக்க வேண்டும்.

2. கணிதம்: 1 முதல் 100 வரை எண்களையறிதல் - 20 வரை கூட்டல் கழித்தல் வாய்ப்பாடுகள் - 0-ன் மதிப்பையறிதல் – இந்திய நாணயங்களையறிதல்

3. இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்: மரங்கள், பறவைகள், பூச்சிகள் இவற்றை உற்று நோக்குதல் – இலைகள், பூக்கள், இறகுகள், கிளிஞ்சல்கள் முதலியன சேகரித்தல்.

4. சமூக அறிவு: நல்ல பழக்க வழக்கங்கள் - பெரியோர்களின் கதைகள் – திசைகள், காற்றுகள் - பாதைகள் - காலநிலை - காலங்கள்.

5. கைவேலை: 1–5 வகுப்புகளுக்கு (a) நூற்றல், நெய்தல் (b) காகித அட்டை வேலை (c) தோட்ட வேலை (d) களிமண் வேலை இவை நான்கில் ஏதேனும் இரண்டைத் தேர்ந்தெடுத்து, ஆண்டுதோறும் மேலும் மேலும் தொழிலைப் படிப்படியாகக் கற்பிக்கலாம். (a) ஓலைப்பாய், காகிதப்பாய் பின்னலாம் (b) அழகிய படங்களைக் கத்தரித்து ஒட்டலாம் (c) பாத்திகளிலிருந்து கற்களை அகற்றுதல், பூவாளியால் நீர் ஊற்றுதல் (d) களிமண்ணால் பல உருவங்கள் செய்யலாம்.

6. சித்திரம் வரைதல்: பலவகைக் கோடுகள், கோடுகளினால் உருவங்கள், சதுரங்கள், வட்டங்கள் வரைதல்.

7. சங்கீதம்: 15 சிறிய அழகிய பாடல்கள்.

## இரண்டாம் வகுப்பு

1. தமிழ்: (i) 500 புதிய வார்த்தைகளை அறியவேண்டும். (ii) செய்யுள் 140 வரிகள் (iii) உரை நடை 32 பாடங்கள் (iv) சொல்லுவதெழுதுதலில் (Dictation) அதிக அளவு பயிற்சி கொடுக்கப்படவேண்டும்.

2. கணிதம்: 1000 வரை எண்களை அறிதல் - 100 வரை கூட்டல் கழித்தல் வாய்ப்பாடுகள் - 2 to 10 பெருக்கல் வாய்ப்பாடுகள் - 2, 3 ஸ்தானக் கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் – நாணயங்களை மாற்றுதல் - நீட்டலளவை, முகத்தலளவை, கால அளவு முதலியன.

3. இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்: மரங்களின் பெயர்கள், பயிர் செய்யப்படும் நிலமும், பயிர் செய்யப் படாத நிலமும் - வீட்டுப் பிராணிகள்; பூச்சிகள்.

4. சமூக அறிவு; பாடங்கள் 90 பிரிவு. அனுபவ வேலை. (Practical work) 40 பிரிவு.

பள்ளியின் இருப்பிடம் - நதிகள், ஏரிகள் போன்ற நீர் நிலைகள் - ஆடைகள், உணவுப் பொருள்கள் - வீட்டில் உபயோகிக்கும் பொருள்கள் (மர. உலோகப் பொருள்கள்) உள்ளூர்ச் சந்தை - பலவகைக் கோவில்கள், புராணங்கள், விழாக்கள் - சுலப சாலைவிதிகள் - சுத்தத்தைப் பாதுகாக்கும் பழக்க வழக்கங்கள்.

5. கைவேலை: (a) கைப்பை தயாரித்தல், புத்தகப் பை தயாரித்தல் (b) அட்டையில் பல வடிவங்கள் செய்தல் (c) களிமண்ணால் பல உருவங்கள் செய்தல் (d) தோட்டத்தைப்பற்றி உற்றுநோக்கி அறிந்து கொள்ளுதல்.

6. சித்திரம் வரைதல்: பெட்டி, பந்து போன்ற சாதாரண பொருள்களின் படங்களை வரைதல்.

7: சங்கீதம்; 15 புதிய பாடல்கள்.

## மூன்றும் வகுப்பு

1. தமிழ்: கதை நடித்தல், உரையாடல். செய்யுள் ஒப்புவித்தல், சிறு கட்டுரை எழுதுதல் - செய்யுள் 30 பாடல்கள் - உரைநடை 30 பாடங்கள் (700 புதிய சொற்கள்) - அமைதிப் படிப்பில் பயிற்சி - எழுதுவதில் வேகமும்,

திறமையும் அதிகரித்தல் - இலக்கணம். பெயர்ச்சொல், வினைச் சொல், ஒருமை பன்மை, மூன்று காலங்கள் • , போன்ற குறிகள்.

2. கணிதம்: 10,000 வரை எண்கள் - 3, 4 ஸ்தானக் கூட்டல், கழித்தல் - 11, 12, 16 வாய்ப்பாடுகள் - பின்னங்கள் ($\frac{1}{4}$, $\frac{1}{2}$, $\frac{3}{4}$, $\frac{1}{8}$, $\frac{1}{16}$) - நாணய இனமாற்றல் – நீட்டலளவை, கெஜம், அடி, அங், மீட்டர், செ. மீ. முதலியன—முகத்தலளவு-நிறை, தோலா, பலம், சேர், வீசை - கால அளவு முதலியன.

3. இயற்கைப் பாடம்: தோட்டம் தயாரித்தல் - அமைத்தல் - புழுக்கள் - பாத்திகள் அமைத்தல் - விதைத்தல் முதலிய தோட்ட சம்பந்தமான சகல வேலைகளையும் அறிதல்.

4. சமூக அறிவு: பாடம் 75 பிரிவு. அனுபவ வேலை 65 பிரிவு. குடும்பம் - கிராமம் - கூட்டு உணர்ச்சி - பள்ளி விதிகள் - விவசாயமும், கைத்தொழிலும் - போக்குவரவு சாதனங்கள் - திசை காட்டும் கருவி தயாரித்தல்.

கைவேலை: (i) பெல்ட், பைகள் தயாரித்தல், பாய் பின்னுதல், சமுக்காளம் நெய்தல். மூங்கில் தட்டி முடைதல், பட்டைகள் தயாரித்து நூல் நூற்று, சிட்டம் போடுதல் (ii) கத்தியை உபயோகித்து அட்டைகளை வெட்டி, பல உருவங்கள் செய்தல் [பைகள், அட்டைகள், புத்தகங்கள்] (iii) களி மண்ணால் பல பொருள்களை செய்தல்.

6, சித்திரம் வரைதல்: எழுத்துக்களை அழகாக எழுதுதல்.

7. சங்கீதம்: பல்லவி, அனுபல்லவி, சரணம் - 15 பாடல்கள்.

## நான்காம் வகுப்பு

1. தமிழ்: 32 பாடங்கள் - செய்யுளில் நல்வழி 10, நீதிவெண்பா 10, சதகம் 3, தேசிங்குராசன் கதை 50 வரி கட்டபொம்மன் கதை 50 வரி - அமைதிப் படிப்புப் பயிற்சி - இலக்கணப் பயிற்சி - நீண்ட எளிய கட்டுரைகள் எழுதுதல்.

2. கணிதம்: பத்து லட்சம் வரை எண்கள் - தசம முறை - நாணயங்கள் - நீட்டலளவை - கொள்ளளவு (படி,

லிட்டர்)-நிறை அளவு (கிராம், கிலோ கிராம்)-கால அளவு-பின்னங்கள். ($\frac{3}{8}$, $\frac{5}{8}$, $\frac{7}{8}$, $\frac{1}{10}$, $\frac{1}{100}$) - தசம பின்னங்கள் - வாங்குதலும் விற்றலும் - சதுரமும். செவ்வகமும். (சதுர அடி. சதுர அங்குலம்)

3. இயற்கைப் பாடம்: தோட்டம் அமைக்கத் திட்டங்கள் – தோட்டம் அமைத்தல் - எருக்கள் தயாரித்தல் - மண்ணைப்பற்றிய அறிவு – விதைகள் பரவும் வகைகள் - பூச்சிகள் - பருவ காலப் பயிர்கள் - எண்ணெய் வித்துக்கள் – உல்லாசப்பயணம் செல்லுதல்-தோட்டக் குறிப்பு வைத்தல்.

4. சமூக அறிவு: (i) மாவட்டம் - கி. பி, கி. மு. விளக்கம் – தென்னிந்தியா - தென்னிந்தியச் சக்கரவர்த்திகள் – விஜயநகர சாம்ராஜ்யம் - சிவாஜி - ஐரோப்பியர் வருகை - ஆங்கிலேயர் ஆட்சி - நமது சுதந்திரப் போராட்டம். (ii) பூகோளம்: பூமியின் வடிவம், துருவங்கள், ரேகைகள், பூமி சுற்றுதல், நிலநீர்ப் பரப்புகள், கண்டங்கள் முதலியன- சீதோஷ்ணம், காற்றுகள், தென்னிந்தியாவின் மேற்குக் கரை, கிழக்குக்கரை,—மாவட்டத்தின் பூகோள அறிவு, சீதோஷ்ணம், தாவர வகைகள், நிலநீர்ப்பிரிவுகள், போக்கு வரவு வசதி, ஜனத்தொகை, மண்வளம், துறைமுகங்கள், ஏற்றுமதி, இறக்குமதி, சமூகநலத் திட்டங்கள், முதலியன – சென்னை மாநில பூகோளம், நான்கு எல்லைகள், மலைகள், நதிகள், கணவாய்கள், பீடபூமிகள், விளைபொருள்கள், கிடைக்கும் உலோகப் பொருள்கள் - தொழில்கள், மக்களின் வாழ்க்கை, அணைகள், தொழிற்சாலைகள், பட்டினங்கள், தரை, கடல், ஆகாய மார்க்கங்கள், ஏற்றுமதி, இறக்குமதிப் பொருள்கள்.

கைவேலை: (i) பெல்ட், பாய், சமுக்காளம், போர்வை, பூவேலைப்பாடுகளுடன் நெய்தல், இராட்டினத்தில் நூற்று ஆண்டுக்குள் 4 சிட்டம் போடவேண்டும். (ii) அட்டையில் பல மாதிரிகள் செய்தல், வீடுகள், பெட்டிகள் முதலியன. (iii) களிமண்ணால் பறவைகள், காய்கள், பூமியின் வடிவம், ஜாடி, பானை, கூஜா முதலியன செய்யலாம்.

6. சித்திரம்: ஓரங்களை அழகுபடுத்துதல், எழுத்துக்களை அலங்கரித்தல்,

7. சங்கீதம்: ஜண்டஸ்வரப்பயிற்சி 1-8. 7 சுரங்களின் பெயர்கள். அனுதுருதம், துருதம், லகு என்ற 3 அங்கங்கள். ஆரோஹண, அவரோஹணத்தில் தெரிந்த 7 பாடல்கள். ஆதிரூபக தாளத்தில் 15 பாடல்கள்.

## ஐந்தாம் வகுப்பு

1. தமிழ்: (i) செய்யுள்—தேவாரம் 1, திருவாசகம் 1, தேம்பாவணி 1, திவ்யப் பிரபந்தம் 1, சீறுபுராணம் 1-திருக்குறள் முதல் அதிகாரம் (கடவுள் வாழ்த்து)—நீதிவெண்பா 5, அறநெறிச்சாரம் 5, ஆசாரக்கோவை 5, பஞ்சதந்திரம் 25 வரிகள், இதரபாடல் 25 வரி (இதில் 80 வரிகள் மனப்பாடம் செய்யவேண்டும்) (ii) உரைநடை: சிறு கதைகள், வரலாறுகள், உரையாடல், ஓரங்க நாடகம், கடிதம் எழுதுதல், கட்டுரைகள் முதலிய பாடங்கள். அமைதிப் படிப்புக்கு அதிகப் பயிற்சி. (iii) 64 பக்கமுள்ள துணைப் பாடம் புத்தகம் - கட்டுரை எழுதும் பயிற்சி (கடிதம், விண்ணப்பம், கதைச் சுருக்கம், பத்திகள் பிரித்து எழுதுவதில் பயிற்சி முதலியன) (iv) இலக்கணம்: எழுத்துக்கள் - சொல் - சொற்றொடர் - நிறுத்துக் குறிகள் முதலியன.

2. கணிதம்: கோடி வரை எண்கள் - சுருக்கு வழியில் பெருக்கலும், வகுத்தலும்-அளவைகள் (திருப்புதல்-நீட்டல், நிறுத்தல், முகத்தல், காலம் முதலியன) ஆங்கில நிறை அளவுகள் (பவுண்டு, அந்தர், அவுன்ஸ்) - சராசரி — தசம பின்னங்கள் - பின்னங்கள் ($\frac{1}{3}$, $\frac{2}{3}$, $\frac{1}{5}$, $\frac{2}{5}$, $\frac{3}{5}$, $\frac{4}{5}$) - நேர் விகிதம் — சதவிகிதம் (லாப நஷ்டக் கணக்குகள்) - சாதா வட்டி - பரப்பளவு (ஏக்கர், செண்டு) - நேர் கோடுகள் (கொடுத்த அளவுக்கு வரைவதும், அளப்பதும்) - சதுரம், நீ. சதுரம் வரைதல்.

3. விஞ்ஞானம்: (i) வீட்டுத் தோட்டம் அமைக்கும் முறைகள் - ஒட்டுக் கட்டுதல் (ii) உணவு வகைகள்-ஜீரணம் - வேக வைத்தல் (iii) சுவாசித்தல் - தூய காற்றின் அவசியம் (iv) நகருதல் - போக்குவரவு சாதனங்கள், சாலை விதிகள் - பிராணிகள் நகரும் விதங்கள் (v) ஆரோக்கியத்தின் அவசியமும் வழிகளும் (vi) ஆடைகள் - வகைகள் (vii) வீடு கட்டுதல் - உபயோகப்படும் பொருள்கள், அவை தயாராகும் விதங்கள், கிடைக்கும் இடங்கள் முதலியன. (viii) சுற்றுப்புறத்தை ஆராய்தல், வீட்டு மிருகங்கள், காட்டு மிருகங்கள் - பறவைகள், தாவரங்கள் - மண், நீர் வசதிகள் - நெருப்

பும் அதன் அவசியமும், உண்டாக்கும் முறைகள். அனுபவ வேலை; தோட்டம் போடுதல், - வயல்கள், பிரயாண சாதனங்கள், யந்திரங்கள், காளவாய்கள் முதலியன பார்த்தல்- முதலுதவி பழகுதல் - தூய்மை செய்தல் - கண் காட்சி அமைத்தல் முதலியன.

4. சமூக அறிவு: (a) சரித்திரம்: (i) சிந்து நாகரிகம் ஆரியர், திராவிடர், வேத இதிகாச காலங்கள், புத்த ஜைன மதங்கள், - ஆதித் தமிழ் மூவேந்தர்கள் (ii) மௌரிய வம்சம், குஷாணர்கள், குப்தர்கள், ஹர்ஷர் (iii) தென்னிந்திய ராஜ்யங்கள் (iv) முகம்மதியர் படையெடுப்பு (v) மூனறு மதாச்சாரியார்கள் (vi) முகலாயர்கள் (vii) ஐரோப்பியர்கள் - சிவாஜி, ஹைதர், திப்பு. ஆங்கிலேயரின் ஆட்சி (viii) சுதந்திரப்போர், தலைவர்கள், சுதந்திரம், இரு யூனியன்கள், சீரமைக்கப்பட்ட மாநிலங்கள்.

(b) ஆட்சிமுறை: (i) நமது குடியரசுச் சட்டத்தின் சிறு விளக்கம், ஆட்சியாளர்கள் (தலைவர், மந்திரிகள்), சட்டமன்றங்கள், நீதிமன்றகள். நடுவரசும் மாநில அரசுகளும் (ii) வங்கிகளும், கூட்டுறவுச்சங்கங்களும் (iii) அஞ்சல், தொலைபேசி, வானொலி முதலியன.

(c) பூகோளம்: இந்தியாவின் இயற்கை, சீதோஷ்ண நிலை, பயிர்கள், மக்கள் தொகை, நீர்ப்பாசனம், ஐந்தாண்டுத் திட்டங்கள், காடுகள், உலோகங்கள், தொழில்கள், போக்கு வரவு வசதிகள், துறைமுகங்கள் முதலியன.

5. கைவேலை: (i) பாய், சமுக்காளம், வலை, நாடா, துண்டுகள் முதலியன நெய்தல். இரட்டை முறுக்கு நூல் தயாரித்தல். (ii) அட்டைகளை வெட்டி உருவங்கள் நான்காம் வகுப்பைவிட மேலாகச் செய்ய வேண்டும். (iii) களிமண் பொம்மைகள் அச்சுகளில் ஊற்றி, சுட்டுத் தயாரித்து, வர்ணம் பூசுதல்.

6. கலை: காகிதம் கத்தரித்து, பூக்கள், அழகிய பொருள்கள் செய்தல்.

7. சங்கீதம்: ஜண்டஸ்வரப் பயிற்சி. 9-12. உச்சஸ்தாயி ஸ்வரங்கள் 1-4. பத்து எளிய கலைச்சொற்கள்.

பல்லவி, அனுபல்லவி, சரணங்களுள்ள 10 பாடல்கள். கும்மி கோலாட்டப் பாட்டுகளும் சொல்லிக்கொடுக்கப்பட வேண்டும்.

## மாதாந்திரக் கணக்கு மனு

**அனுப்பவேண்டிய முறைகள்:** ஒவ்வொரு மாதமும் 3-ம் தேதிக்குள் முந்திய மாதத்தின் கணக்குகள் கீழே கொடுக்கப்பட்டுள்ள மனுவில் பூர்த்தி செய்து டெபுடி இன்ஸ்பெக்டருக்கு அனுப்பப்பட வேண்டும்.

TAMIL NADU ARCHIVES No.

## மனு

ஆண்டு மாதம்.

1. பள்ளியின் பெயர்.

2. வேலை செய்வோர்பற்றிய விபரம். (i) எண் (ii) பெயர் (iii) படிப்பின் விபரம் (iv) சம்பளம் (v) எந்த நாள் முதல் எந்த நாள் வரை (vi) இம் மாதத்தில் எடுத்த விடுமுறை (vii) மதிப்பீடு (டெபுடி இன்ஸ்பெக்டர் செய்ய வேண்டியது), (viii) இம் மாதத்திய மொத்த மதிப்பீடு.

3. வகுப்புகள்: (i) வகுப்புகள் 1, 2, 3 என...... (ii) அனுமதி அளிக்கப்பட்ட தேதி உத்திரவு எண் முதலியன (iii) ஆஜர்பதிவேட்டிலே, மாத ஆரம்பத்தில் இருந்த மாணவர்கள், மாணவிகள் (தாழ்த்தப்பட்டவர், பிறர்) (iv) இம் மாதம் சேர்ந்தவர்கள் (v) இம்மாதம் விலகியவர்கள் (vi) மாதக் கடைசியில் உள்ளவர்கள் (vii) சராசரி வருகை (viii) குறைந்த வயதுடைய பிள்ளைகளின் எண்ணிக்கை (ix) தேக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை (x) உதவித் தொகை மதிப்பீடு செய்ய, கணக்கிலெடுத்துக் கொள்ளப் படும் மாணவரின் சராசரி வருகை. கீழே - மொத்தம், சராசரி வருகைக் கணக்கின்படி உதவித் தொகை பெறத் தகுதி வாய்ந்த ஆசிரியர்களின் எண்ணிக்கை.

4. பள்ளி வேலை செய்த நாட்கள். 5. ஆசிரியர் சங்கக் கூட்டத்துக்கு வராத ஆசிரியர்கள் 6. அடுத்த மாதத்தில் முடுமுறை நாட்கள் 7. பள்ளி இடம், வேலை நேரம், விடுமுறை நாட்கள், இவற்றில் ஏதாவது மாற்றம் இருந்தால்

கீழே—இடம், தேதி, தாளாளர் கையொப்பம்.

## தயாராகும் நூல்கள்

1. கடிதம் சொன்ன கதை (சிறுகதைகள்)
2. தமிழ்ச் சோலையிலே! (கட்டுரைகள்)
3. இதய வாழ்த்து (நாடகம்)
4. குளிர் பூத்தது (கவிதைகள்)

**சேகர் பதிப்பகம்,**
திருச்சிராப்பள்ளி-2.

Kannan Press, Tiruchirappalli-2.